2718



SIR GABRIEL STOKES, K.C.S.I.

A

HAND-BOOK

ON

2718

Practical Chain Survey

(TAMIL)

BY

P. R. NARAYANAIYAR,

Deputy Director of Survey.

SECOND EDITION REVISED

5,000 Copies.

(First Edition 3,000 Copies printed and issued.)

Madras:

PRINTED BY HOE AND CO. AT THE 'PREMIER' PRESS,

5, STRINGER'S STREET, GEORGETOWN.

1909.

[ALL RIGHTS RESERVED.]

PRICE 1 RUPEE.] [POSTAGE EXTRA.

For Copies apply to

Messrs. V. Perumall Chetty & Sons,

Wholesale Stationers, etc.,

MADRAS.

TO 2718

HIS EXCELLENCY

THE HONOURABLE

MR. GABRIEL STOKES,

B.A., C.S.I., I.C.S.,

Governor of Fort St. George & its Dependencies,

1906.

This Work

is, with kind permission,

gratefully and respectfully dedicated

BY

his ever faithful, dutiful and humble servant.

P. R. NARAYANAIYAR,

Asstt. Director of Survey.

27TH MARCH 1906.

PREFACE.

3,000 Copies were printed and sold in a short time. It is gratifying to find that the book has met a public want, and I am grateful for the appreciation shown by the public.

2. The Second Edition is now issued. A few problems have been added to Chapter IV. The book has been revised and errors have been corrected.

3. An excellent likeness of Sir Gabriel Stokes has been added.

4. It is hoped that the book will find even a wider field of usefulness.

5. Suggestions for the improvement of the book will be thankfully received.

June 1909. P. R. N.

PREFACE TO THE FIRST EDITION.

This Hand-book is a collection of notes made, from time to time, for instructing Karnams, Surveyors and others in Practical Chain Survey.

2. The book is intended to render it possible, for any ordinary Surveyor with an elementary knowledge of arithmetic, to survey easily and cheaply, at no sacrifice of accuracy with *chain and cross-staff* alone, any locality whatsoever, to refix any stone wherever missing, and to compute area of any field howsoever measured.

3. The want of such a book in the vernaculars of the country has long been felt by Surveyors and Karnams.

4. I have endeavoured to do my best to make myself serviceable by publishing the notes in a form adapted to the requirements, and by such an attempt I have only discharged a faithful and pleasurable duty.

5. What is most gratifying to me is that I have been fortunate enough to be able to dedicate such a simple book to so great a personage as His Excellency the Governor of Madras.

SALEM, *24th March 1906.* P. R. NARAYANAIYAR

மு க வு ரை.

இச்சின்ன புஸ்தகம் கணக்கர்களுக்கும், சர்வேயர்களுக்கும் இன்னும் இதரர்களுக்கும் சங்கிலிசர்வே சொல்லி வைக்கும் சமயங்களில் அப்போதைக்கப்போது எழுதி வைத்திருந்த குறிப்புகளிலிருந்து வரையப்பட்டது.

2. கணிதத்தில் அதிக தேர்ச்சியில்லாத எந்த சர்வேயரும், எவ்விதமான பிரதேசத்தையும் சங்கிலி கிராஸ்டாபினுடைய உதவியினாலேயே சுலபமாயும் பணச் செலவன்றியும் பிழையில்லாமலும் அளக்கவும், காணாமல் போன எந்த கல்லையும் மறுபடி நட்டுவைக்கவும் எவ்விதமாக அளக்கப்பட்ட புலத்தின் விஸ்தீரணத்தையும் கணக்கிடவும் உபயோகமாயிருக்க வேண்டுமென்ற உத்தேசத்துடன் எழுதப்பட்டது.

3. இம்மாதிரி புஸ்தகம் நம்மதேச சுயபாஷையில் இதுவரையிலில்லாதது கணக்கர்களுக்கும் சர்வேயர்களுக்கும் ஒரு பெரிய குறைவாகவேயிருந்தது. எழுதிவைத்திருந்த குறிப்புகளை உத்தேசித்த பிரகாரம் உபயோகமாகவிருக்கும்படி என்னால் இயன்ற வரையில் எழுதியிருக்கிறேன். அப்படிசெய்வதில் உண்மையும் திருப்திகரமுமான ஒரு கடமையை நிறைவேற்றிக் கொண்டதைத் தவிர வேறில்லை.

4. எனக்கு எல்லாவற்றிலும் முக்கிய சந்தோஷத்திற்கு காரணம் என்னவென்றால் இவ்வற்ப புஸ்தகத்தை சென்னை இராஜதானி மகாகனம் பொருந்திய ஸ்ரீ கவர்னரவர்களுக்கு அர்ப்பணம் செய்யும்படியான பாக்கியம் கிடைத்ததுதான்.

பி. ஆர். நாராயணய்யர்.

சேலம்,
1906௵ மார்ச்சு௴ 24௳

CONTENTS.

அடக்கம்.

அத்தியாயம் 1.

கருவிகள்.

பக்கம்

1. ஆப்செட்டு கோலை சோதித்து திருத்தும் வழி 1
2. சங்கிலியை சோதித்து திருத்தும் வழி ... 2
3. கிராஸ்ஸ்டாப்பை சோதித்து திருத்தும் வழி 2
4. பிசகான கிராஸ்ஸ்டாப்பினால் சரியான ஆப்செட்டு எடுக்கும் விதம் 3

அத்தியாயம் 2.

வர்க்கமும் மூலமும்.

1. விவரணம் 4
2. வர்க்கத்திற்கு மூலம் கண்டு பிடிக்கும் விதம்... 5

அத்தியாயம் 3.

நேர்க்கோண முக்கோணமும் சமகோண முக்கோணங்களும்.

1. நேர்கோண முக்கோணத்தின் குணாதிசயங்கள் 11

பக்கம்

2. சமகோண முக்கோணங்களின் குணதிசயங்கள் 11

3. நேர்க்கோண முண்டாக்கும் விதம் ... 12

அத்தியாயம் 4.

லயன் அளவுகள்.

1. சரிவான பக்கங்களில் அளக்கும் விதம் ... 26

2. லயன் அளக்கக்கூடியதாயிருந்து ஜண்டாக்கள் மறைவு படும் கேசுகளில் லயன் ஏற்படுத்தி அளக்கும் விதம் 27

3. தடைப்பட்ட லயன்களை அளக்கும் விதம்—

(A) ஜண்டாக்கள் தெரிந்து லயன் தடைப்பட்டிருந்தால் 29

(B) ஜண்டாக்கள் தெரியாமல் லயனும் தடைப்பட்டிருந்தால் 36

(C) கற்கள் தெரிந்தும் அவைகளின் சமீபத்தில் போக முடியாத கேசுகளில் ... 39

4. தடைப்பட்ட லயனின் பேரில் எடுக்கவேண்டிய ஆப்செட்டுகளை அதற்கு சமதூர லயன் ஒன்று ஏற்படுத்தி யெடுப்பது 47

5. தடைப்படும் ஆப்செட்டுகளை அளக்கும் விதம் 53

6. ஒரு பர்ட்டால் லயனில் அதற்கு குறுக்கே போகும் தடைப்பட்ட வேறொரு லயனைசேர்க்க ... 56

பக்கம்

7. ஒரு லயன் பேரில் எடுக்கப்பட்ட ஆப்செட்டு செயின் லயன் அளவுகளைக்கொண்டு அதே குறிகளுக்கு மற்றொரு லயன் பேரிலுண்டாகும் ஆப்செட்டு செயின் லயன் அளவுகள் கண்டுபிடிக்க ... 57

8. பூமியில் அளக்காத லயன் அளவை கணித மூலியமாய் கண்டு பிடிக்க 60

9. தடைப்பட்ட லயனை பூமியில் ஸ்தாபிக்க ... 64

அத்தியாயம் 5.

அளக்க முடியாத பிரதேசங்களை அளக்கும்விதம்—

1. ஒரே லயன் பேரில் எல்லா கற்களுக்கும் ஆப்செட்டு எடுத்து 73

2. ஒன்றுக்கொன்று நேர்க்கோணமாயுள்ள இரண்டு லயன்களின் பேரில் ஆப்செட்டு எடுத்து ... 74

3. ஒன்றுக்கொன்று நேர்க்கோண மாயுள்ள அநேக லயன்களின் பேரில் ஆப்செட்டு எடுத்து ... 75

4. புலத்தைச் சுற்றி முக்கோணம் ஏற்படுத்தி அதின் பக்கங்களின் பேரில் ஆப்செட்டு எடுத்து ... 75

5. எல்லாம் நேர்க்கோணமாயுள்ள நாற்கோணமேற்படுத்தி அதின் பக்கங்களின் பேரில் ஆப்செட்டு எடுத்து 76

6. ஒன்று மாத்திரம் நேர்க்கோணமாயுள்ள நாற்கோண மேற்படுத்தி அதின் பக்கங்களின்பேரில் ஆப்செட்டு எடுத்து 77

பக்கம்

7. நான்குக்கு மேற்பட்ட பக்கங்களுள்ள உருவும் ஏற்படுத்தி அதின் பக்கங்களின்பேரில் ஆப்செட்டு எடுத்து 77

8. தூரத்திலிருந்து தெரிந்து பக்கத்தில் நெருங்க முடியாத சுற்று கற்களையுடைய புலத்தை அளக்க 78

அத்தியாயம் 6.

1. அன் சர்வே பிளாக்கின் மத்தியிலுள்ள சாகுபடித்துண்டுகளை பிளானில் சேர்க்கும் விதம் ... 80

அத்தியாயம் 7.

பிளாட்டிங்.

கைஸ்கெட்சு பிளாடெட் பிளான் இவைகளின் விவரணமும் ஒன்றுக்கொன்றுள்ள வித்தியாசமும்... 83

பிளானின் ஸ்கேலும் திக்கும் 85

கை ஸ்கெட்ச தயார் செய்யும் விதம் ... 86

பிளாட்டிங்குக்கு வேண்டிய கருவிகளும் அவைகளை உபயோகிக்கும் விதம் 88

பலவித சர்வேகளின் விவரம் 92

பூமியிலுள்ள ஒரு குறியின் ஸ்தானத்தை பிளானில் நிர்த்தாரிப்பது 93

பக்கம்

பூமிக்கும் பிளானுக்கு முள்ள தாமாஷா கண்டு பிடிப்பது 96

பிளாட்டு செய்த ஒரு உருவத்தை சிறிது அல்லது பெரிது படுத்துவது 97

அத்தியாயம் 8.

விஸ்தீரணம் தணிக்கும் விதம்.

1. ஸ்கொயரின் 99

2. நேர்க்கோண நாற்கோணத்தின் ... 99

3. நேர்க்கோண முக்கோணத்தின் ... 100

4. ஏதேனு மொரு முககோணத்தின் ... 100

5. ஏதேனு மொரு நாற்கோணத்தின் ... 105

6. ஒரு கோணமாத்திரம் நேர்க்கோணமாயுள்ள நாற்கோணத்தின் 107

7. இரண்டு நேர்க்கோணங்களுள்ள நாற்கோணத்தின் 108

8. இருபக்கமும் சமதூரமுள்ள நாற்கோணத்தின் 110

9. ஒரு பக்கமாத்திரம் சமதூரமுள்ள நாற்கோணத்தின் 111

10. ஒரு லயனுக்கு இருபக்கமுமுள்ள நேர்க்கோண முக்கோணங்களின் விஸ்தீரணங்களின் வித்தியாசம் கண்டு பிடிக்க 111

பக்கம்

11. ஒரே லயனில் எல்லா கற்களுக்கும் ஆப்செட்டுகள் எடுக்கப்பட்டிருக்கும் புலத்தின் விஸ்தீரணம் கண்டு பிடிக்க 113

12. ஷெ புலத்திலுள்ள சப்டிவிஷன்களின் விஸ்தீரணம் கண்டு பிடிக்க 117

13. முக்கோண வழியாய் அளக்கப்பட்ட புலம் அதின் சப்டிவிஷன்கள் இவைகளின் விஸ்தீரணம் கண்டு பிடிக்க 123

அத்தியாயம் 9.

காணமற்போன கற்களை நடுவது.

1. முக்கோணத்தில் ஒரு கல் காணமலிருந்தால். 129

2. டயாக்கினல் ஆப்செட்டு வழியாய் அளக்கப்பட்ட புலத்தில் 134

(a) ஆப்செட்டுகற்கள் காணமலிருந்தால் ... 134

(b) & (c) லயன்கல் ஒன்றும் ஆப்செட்டுகல் ஒன்றும் காணமலிருந்தால் ... 134-136

(d) (e) & (f) லயன்கற்கள் இரண்டும் ஆப்செட்டு கற்கள் சிலதும் காணமலிருந்தால் ... 137-140

3. பிளாக்கு சிஸ்டத்தால் சர்வே செய்யப்பட்ட புலத்தில் கற்கள் காணமலிருந்தால் 143

32

CHAPTER I.

அத்தியாயம் 1.

INSTRUMENTS.

கருவிகள்.

1. To test and correct a ten (10) links standard (offset) pole—

பத்து லிங்க்ஸ் ஸ்டாண்டெர்டு (ஆப்செட்டு) கோலை சோதித்து திருத்தும் வழி—

(*a*) By scale—ஸ்கேலினால்.

16 அங்குல ஸ்கேலில் 3,960 லிங்க்ஸ் என்கிற அளவையாகிலும் அல்லது 40 அங்குல ஸ்கேலில் 1,584 என்கிற அளவையாகிலும் கம்பாஸில் எடுத்து ஆப்செட்டு கோலில் ஒரு லிங்குக்கு சரியாயிருக்கிறதாவென்று சோதித்து அதே கம்பாஸை பத்து தடவை ஷை கோலின் பேரில் திருப்பினால் பூராவையும் தனிக்கை செய்யலாம். வித்தியாசமிருந்தால் சீர்திருத்திக்கொள்ள வேண்டியது.

(*b*) Another method—By tape.

மற்றொரு வழி—டேப்பினால்.

டேப் இருந்தால் அதில் சாதாரணமாய் பின்புறம் போட்டிருக்கும் லிங்க்ஸ் அடையாளத்தாலும் தனிக்கை செய்யலாம். இம்மாதிரி தனிக்கைசெய்து சரியாய் பத்து லிங்க்ஸ் இருக்கும்படி திருத்தவேண்டியது.

2. To test and correct a chain—

சங்கிலியை சோதித்து திருத்தும் வழி—

ஒரு சமமான தரையாகப் பார்த்து இரண்டு முளை களை கெட்டியாய் அடித்து அவைகளின் மத்தியில் சங்கிலியை இழுத்து மாட்டி இரண்டு ஆப்செட்டு கோல்களை ஒன்றோடு ஒன்று சேரும்படி சங்கிலியின்பேரில் வைத்து ஒன்று மாற்றி ஒன்றாய் எடுத்து ஜாக்கிரதையாய் அளக்க வேண்டும். சங்கிலி சரியாயிருந்தால் ஷை முளைகளை நகர்த்த வேண்டியதில்லை. சரியாய் இல்லாமலிருந்தால் சரியான இடத்திற்கு நகர்த்தி அடிக்கவேண்டும். ஐம்பது (50) லிங்க்ஸினிடம் ஒரு முளை அடிப்பதும் நலம். ஒவ்வொரு பத்து (10) லிங்க்ஸிலும் போடப்பட்டிருக்கும் அரசிலையை அனுசரித்து அவைகளின் பக்கத்தில் பத்து லிங்க்ஸ் கோலை சேர்த்து வைத்ததை எடுத்ததும் ஒவ்வொரு சிறு முளையை அடிப்பது அதிக சவுகரியம். சங்கிலி அதிக நீளமாயிருந்தால் எந்த பாதியில் அல்லது எந்த பத்து லிங்க்ஸில் அதிகமாக இருக்கிறதோ அதில் சரியான அளவு வரும் வரையில் சில வளையங்களை எடுத்துவிட வேண்டியது. கம்மியாக இருந்தால் சரியான நீளம் கிடைக்கும் வரையில் சில வளையங்களை சேர்க்கவேண்டியது. எடுக்கப்படும் வளையங்களை சங்கிலியிலேயே தொங்க விடவேண்டியது. பின்னிட்டு பிரதிகாலையிலும் அளவுக்கு முந்தி ஷை சங்கிலியை மேற்கண்ட முளைகளில் மாட்டி எடுப்பதே போதும்.

3. To test a cross-staff—

கிராஸ்ஸ்டாப்பை சோதிக்கும் வழி—

கிராஸ்ஸ்டாப்பின் ஒரு வரையினால் சுமார் 5 சங்கிலிக்கு மேற்பட்டிருக்கும் ஒரு ஜண்டா, மத்தியில் தெரியும்படி

கிராஸ்ஸ்டாப்பை திருப்பிவைக்கவேண்டியது. மற்றொரு வரையின் நடு மத்தியில் தெரியும்படி சுமார் 5 சங்கிலி தூரத்தில் வேறு ஒரு ஜண்டாவை நிறுத்த வேண்டியது. பின்னிட்டுகிராஸ்ஸ்டாப் குத்தின இடம்மாறாமல் முதலில் பார்த்த ஜண்டா இரண்டாவது பார்த்தவரையின் மத்தியில் தெரியும்படி கிராஸ்ஸ்டாப்பை கால்சுத்து திருப்ப வேண்டியது. அப்புறம் கிராஸ்ஸ்டாப்பைதொடாமல் மற்றொருவரையின் மத்தியில் இரண்டாவது ஜண்டா தெரிகிறதாவென்று பார்க்கவேண்டியது. அப்படி தெரிந்தால் கிராஸ்ஸ்டாப்பு சரியென்றும் தெரியாவிட்டால் பிசகு என்றும் அறியவேண்டியது. பிசகாயிருக்கும் கிராஸ்ஸ்டாப்பை திருத்தி சரிசெய்ய முடியாது. வேறேதான் செய்விக்கவேண்டியது. ஆனால் பிசகான கிராஸ்ஸ்டாப்பினால் சரியான ஆப்செட்டு அடியில் விவரித்திருக்கிறபடி எடுக்கலாம்.

4. To get a correct offset with an incorrect cross-staff—

பிசகான கிராஸ்ஸ்டாப்பினால் சரியான ஆப்செட்டு எடுக்கும் விதம்—

Fig. **1.**



Fig. **2.**



AB என்கிற லயனில் C என்னும் குறிக்கு ஆப்செட்டு எடுக்கவேண்டியிருக்கிறது. கிராஸ்ஸ்டாப்பின்

இரண்டு நேர்க்கோணவரையின் பக்கம் OL என்று குறிப்பான அடையாளம் போட்டுக்கொள்ள வேண்டியது. L குறியிட்ட வரையில் AB லயனைப்பார்த்து O குறியிட்ட வரையில் C கல்லைப் பார்த்ததில் D என்னும் குறியில் ஆப்செட்டு வருகிறது. மறுபடி அதே D என்னும் குறியில் கிராஸ்ஸ்டாப்பை நிறுத்தி O என்னும் குறியிட்ட வரையை AB லயனுக்கு நேராக வைத்து L வரையில் பார்க்க C கல் காணப்படாததால் கிராஸ் ஸ்டாப் தப்பென்று அறிந்தோம். O வரையில் AB லயனைப்பார்த்து L வரையில் C தெரியும்படியான இடம் எது வருகிறதென்று பார்க்க E ஏற்படுகிறது. DE யை அளந்து அதன் நடுமத்தியாகிய F யை கண்டுபிடித்தால் அதுதான் சரியான கிராஸ்ஸ்டாப்பினுல் C கல்லுக்கு ஆப்செட்டு வரக்கூடிய இடம். CF யை அளந்தால் சரியான ஆப்செட்டு தெரியும்.

CHAPTER II.

அத்தியாயம் 2.

SQUARES AND SQUARE ROOTS.

வர்க்கமும் மூலமும்.

1. Definition.

ஓர் எண்ணை அதே எண்ணினுல் பெருக்கினுல் வரும மொத்தத்திற்கு 'வர்க்கம்' (Square) என்றும், எந்த எண் அதே எண்ணினுல் பெருக்கப்படுகிறதோ அதற்கு 'மூலம்' (Root) என்றும் பெயர்.

உதாரணம்—

மூலம்.		வர்க்கம்.
8	–	64
17	–	289
223	–	49729

ஓர் வர்க்க எண்ணுக்கு மூலம் கண்டுபிடிக்க வேண்டும் என்பதை காட்ட $\sqrt{\ }$ என்னும் சங்கேதக்குறி உபயோகப்படுத்தப்படும்.

அதாவது $\sqrt{25}$ என்பதினால் 25 என்னும் வர்க்க எண்ணுக்கு மூலம் கண்டுபிடிக்க வேண்டுமென்பதை காட்டும்.

உதாரணம்—

$$\sqrt{81}=9.$$
$$\sqrt{2116}=46.$$
$$\sqrt{236196}=486.$$

2. How to extract a square root—

ஒரு 'வர்க்க' எண்ணுக்கு 'மூலம்' கண்டுபிடிக்கும் வழி—

(*a*) ஒரு (ஸ்தானம்) எண்ணுள்ள மூல எண்களுக்கு வர்க்கங்கள் முதலில் வாய்ப்பாடமாய் தெரிந்துக் கொள்ளவேண்டியது.

உதாரணம்—

மூலம்.		வர்க்கம்.
1	—	1
2	—	4
3	—	9
4	—	16
5	—	25
6	—	36
7	—	49
8	—	64
9	—	81
10	—	100

(*b*) இரண்டு எண்களுக்கு மேற்படாத வர்க்கத்திற்கு 'மூலம்' வேண்டுமானல், மேற்கண்ட வாய்ப்பாட்டைக் கொண்டு கண்டுபிடிக்க வேண்டியது. கொடுத்த வர்க்கம் வாய்ப்பாட்டில் கண்ட வர்க்கத்திற்கு சம்மந்தப்படாமலிருந்தால் அது வாய்ப்பாட்டில் கண்ட வர்க்கத்தில் எதற்கு சமீபிக்கிறதோ அதின் மூலத்தை கொடுத்த வர்க்கத்தின் மூலமாக வைத்துக்கொள்ளலாம்.

உதாரணம்—

49, இதற்கு வாய்ப்பாட்டின்படி மூலம் 7 ஆகிறது. 77, இது வாய்ப்பாட்டில் கண்ட வர்க்கத்தில் சம்பந்தப்படவில்லை. ஆனல் 81 க்கு சமீபிக்கிறது. ஆகையால் அதின் மூலம் 9.

85, இது வாய்ப்பாட்டில் கண்ட 81 க்கு சமீபிக்கிறது. ஆகையால் இதின் மூலம் 9.

(*c*) இரண்டு எண்களுக்கு மேற்பட்ட தொகைக்கு 'மூலம்' கண்டுபிடிக்க வேண்டுமானால் ஷை மொத்தத்தின் வலதுகடைசி எண்ணின்பேரில் ஒரு புள்ளிவைத்து அதினின்று இடதுபுறமாய் ஒரு எண்விட்டு அடுத்த எண்ணின்பேரில் ஒவ்வொரு புள்ளியாக வைக்க வேண்டியது.

உதாரணம்—

(1) $5\dot{7}7\dot{6}$

(2) $8\dot{3}0\dot{0}$

(3) $\dot{7}3\dot{9}8\dot{4}$

(4) $\dot{9}6\dot{4}6\dot{5}$

(5) $4\dot{8}5\dot{8}0\dot{9}$

(6) $8\dot{2}3\dot{8}6\dot{2}$

(7) $9\dot{9}0\dot{6}2\dot{5}$

இப்படி புள்ளிகள் வைத்தவுடனே நமக்கு கிடைக்க வேண்டிய 'மூலம்' எத்தனை புள்ளிகள் வைக்கப்பட்டதோ அத்தனை எண்கள் உடையது என்று அறியலாம்.

(*d*) பின்னிட்டு இடதுபுறத்தில் முதல்புள்ளி வரைக்கும் உள்ள எண் அல்லது எண்களில் அடங்கிய பெரியமூலத்தை வாய்ப்பாட்டினால் அறிந்து எடுத்து

அடியில்கண்டபடி வர்க்கமூலங்களை எழுதி மிச்சத்தை கழிக்கவேண்டியது.

உதாரணம்—

$$\begin{array}{l} 7)5\dot{7}7\dot{6}(7 \\ \ \ \ 49 \\ \hline \ \ \ \ 8 \end{array}$$

(e) வந்த மிச்சத்துக்குப் பக்கத்தில் வகுத்தலில் ஒவ்வொரு எண்ணை எடுப்பதுபோல் இதற்கு இரண்டு எண் அதாவது அடுத்த புள்ளிவைத்திருக்கும் வரைக்கும் எடுத்து எழுதி மேலே ஈவு ஸ்தானத்தில் தாக்கல் செய்திருக்கும் எண்ணின் இரட்டிப்புத்தொகையை இப்போது கிடைத்த தொகைக்கு வகுக்கும் எண் ஸ்தானத்தில் தாக்கல்செய்து கொள்ளவேண்டியது. பிறகு இந்த வகுக்கப்படும் தொகையின் வலதுபுறம் கடைசி எண்ணை மறைத்து மீதி இருக்கும் தொகையானது நாம் தாக்கல் செய்து வகுக்கும் எண்ணினால் எத்தனைதரம் வகுக்கக் கூடுமோ அதை கண்டுபிடித்து இந்த எண்ணை முன் குறித்திருக்கும் வகுக்கும் எண்ணுக்கும் ஈவுக்கும் வலது பக்கத்தில் தாக்கல்செய்து அடியில் காட்டியபடி வகுக்க வேண்டியது. கழிக்கவேண்டிய தொகை இப்படிவகுப்பதில் கழிபட வேண்டிய தொகையைவிட ஜாஸ்தியாயிருந்தால் அதிகமாய்சேர்த்த ஈவில் ஒன்றை குறைத்து மறுபடி அதை யனுசரித்து திருத்தி கழிக்கவேண்டியது. அதே மாதிரி அடுத்த மூல எண்களையும் கண்டுபிடித்து வகுக்க வேண்டியது. இவைகளெல்லாம் அடியில்கண்ட உதாரணங்களால் நன்றாய் விசிதமாகும்.

உதாரணம்—

(1)

```
  7)5776(76
    49
146)876
    876
      0
```

76 என்பதுதான் 'மூலம்'. $\sqrt{5776}=76$.

(2)

```
  9)8300(91
    81
181)200
    181
     19
```

மிச்சம்வந்த 19 ஆனது 91 றைவிட கம்மியாயிருப்பதால் மூலம் 91. $\sqrt{8300}=91$.

(3)

```
  2)73984(272
    4
 47)339
    329
542)1084
    1084
```

272 மூலம். $\sqrt{73984}=272$.

(4)

```
  3)96465(310
    9
 61)64
    61
620)365
```

இதில் 365 ஆனது 310 தை விட அதிகமாயிருப்பதால் மூலம் 311 என்று வைத்துக்கொள்ள வேண்டியது.

(5)

```
      6)485809(697
        36
   129)1258
       1161
  1387)9709
       9709
          0
```

697 மூலம். $\sqrt{485809} = 697$.

(6)

```
      9)823862(907
        81
  1807)13862
       12649
        1213
```

மிச்சம் 1213 ஆனது 907 யை விட ஜாஸ்தியா யிருப்பதால் 908 மூலம் என்று வைத்துக் கொள்ள வேண்டியது. $\sqrt{823862} = 908$.

(7)

```
      9)990625(995
        81
   189)1806
       1701
  1985)10525
        9925
         600
```

இதில் மிச்சம் 600 ஆனது 995 யை விட கம்மியா யிருப்பதால் மூலம் 995 என்றே வைத்துக்கொள்ள வேண்டியது. $\sqrt{990625} = 995$.

CHAPTER III.

அத்தியாயம் 3.

PROPERTIES OF RIGHT-ANGLED AND SIMILAR TRIANGLES AND CONSTRUCTION OF RIGHT ANGLES.

1. Properties of a right-angled triangle.

நேர்க்கோண முக்கோணத்தின் குணதிசயங்கள்.

(*a*) Definition.

(1) In a right-angled triangle the longest side subtends the right angle and is called the hypotenuse.

ஓர் நேர்க்கோண முக்கோணத்தில் அதிக நீளமான பக்கமானது நேர்க்கோணத்திற்கு எதிராயிருக்கிறது. அதற்கு ஹைபாடினியூஸ் என்று பெயர். Fig. 3-ல் AC பக்கம் ஹைபாடினியூஸ்.

Fig. 3.



(2) If a perpendicular be drawn from the right angle to the hypotenuse, the parts into which the hypotenuse is divided are called segments.

ஹைபாடினியூஸிலிருந்து நேர்க்கோண மூலைக்கு ஆப்செட்டு எடுத்து, அதினால் பிரிக்கப்படும் ஹைபாடினியூஸின் இரண்டு பாகத்திற்கும் 'செக்மெண்டு' என்று பெயர். Fig. 4-ல் BD, DC இரண்டும் செக்மெண்டுகள்.

Fig. **4.**



(3) The sides containing the right angle are perpendicular to each other, though not necessarily equal. One of the sides containing the right angle is called the base and the other its perpendicular.

நேர்க்கோணத்தை உண்டுபண்ணும் பக்கங்கள் ஒன்றுக்கொன்று செங்குத்தா யிருக்கின்றன. ஆனால் அவை ஒன்றுக்கொன்று சமமாயிருக்கவேண்டிய அவசியமில்லை. நேர்க்கோணத்தை உண்டுபண்ணும் பக்கங்கள் இரண்டினுள் ஒன்றுக்கு 'பேஸ்' என்றும் மற்றொன்றுக்கு 'ஆப்செட்டு' என்றும் பெயர். Fig. 5-ல் AB ஆப்செட்டு, BC பேஸ்.

Fig. **5.**



(*b*) Relation of the sides to the hypotenuse.

(1) The square on the hypotenuse is equal to the sum of the squares on the other two sides containing the right angle.

ஹைபாடினியூஸினுடைய வர்க்கமானது (Square) நேர்க்கோணத்தை உண்டுபண்ணும் மற்ற இரண்டு பக்கங்களின் தனித்தனி வர்க்கங்களை கூட்டிவரும் மொத்தத்திற்கு சரியாயிருக்கும். (Fig. 5 யை பார்க்க.)

உதாரணம்—

$$AC^2 = AB^2 + BC^2$$

$$50^2 = 30^2 + 40^2$$

அல்லது $2,500 = 900 + 1600 = 2,500$.

(2) The length of the hypotenuse is the root of the sum of the squares on the sides containing the right angle.

ஹைபாடினியூஸினுடைய நீளமானது நேர்க்கோணத்தை உண்டுபண்ணும் பக்கங்களின் வர்க்கங்களைக்கூட்டிவரும் மொத்தத்தின் மூலத்திற்கு சரி.

Fig. 6.



உதாரணம்—

ஹைபாடினியூஸ் $= \sqrt{12^2 + 16^2}$

$= \sqrt{144 + 256}$

$= \sqrt{400} = 20.$

(3) The length of either of the sides containing the right angle is the root of the difference of the squares on the hypotenuse and the other side.

நேர்க்கோணத்தை உண்டுபண்ணும் இரண்டு பக்கங்களுள் ஏதாவது ஒன்றின் நீளமானது ஹைபாடினியூஸினுடைய வர்க்கத்திலிருந்து மற்றொரு பக்கத்தின் வர்க்கத்தை கழித்து வரும் மிச்சத்தின் மூலத்திற்கு சரி. (Fig. 6 யை பார்க்க.)

உதாரணம்—

ஹைபாடினியூஸ் $= 20.$

நேர்க்கோணத்தை சார்ந்த ஒருபக்கத்தின் அளவு $= 12.$

மற்றொரு பக்கத்தின் அளவு

$= \sqrt{20^2 - 12^2}.$

$= \sqrt{400 - 144}.$

$= \sqrt{256} = 16.$

(c) If a perpendicular be drawn from the right angle to the hypotenuse—

ஒரு நேர்க்கோண முக்கோணத்தில் நேர்க்கோண மூலையிலிருந்து எதிர்ப்பக்கத்துக்கு ஆப்செட்டு எடுத்தால்—

(1) The product of the perpendicular thus drawn and the hypotenuse is equal to the product of the two sides adjoining the right angle.

ஹைபாடினியூஸையும் அதின் பேரில் விழும் ஆப்செட்டையும் பெருக்கிவந்த தொகையானது நேர்க்கோணத்தைச்சார்ந்த இரண்டு பக்கங்களை பெருக்கி வந்த தொகைக்கு சரியாயிருக்கும்.

Fig. 7.



$$AD \times BC = AB \times AC.$$

(2) The product of the hypotenuse and one of its segments is equal to the square of the side adjoining the segment.

ஷெ நேர்க்கோண முக்கோணத்தின் ஹைபாடினியூஸையும் செக்மெண்டின் ஒன்றின் அளிவையும்

பெருக்கி வந்த தொகை அ செக்மெண்டுடன் சேரும் பக்கத்தின் வர்க்கத்துக்கு சரியாயிருக்கும்.

$$BC \times BD = AB^2.$$

$$BC \times CD = AC^2.$$

(3) The product of the two segments of the hypotenuse is equal to the square of the perpendicular drawn.

ஹைபாடினியூஸின் இரண்டு செக்மெண்டுகளையும் ஒன்றோடொன்று பெருக்கி வந்ததொகை அதின்பேரில் விழும் ஆப்செட்டின் வர்க்கத்துக்கு சரியாயிருக்கும். Fig. 7-ல்

$$BD \times DC = AD^2.$$

2. Properties of similar triangles.

பக்கங்கள் சமமாயிராமல் கோணங்கள் மட்டில் ஒன்றுக்கொன்று முறையே சமமாயிருக்கும் முக்கோணங்களின் குணுதிசயங்கள்.

Fig. 8.



(*a*) Fig. 8-ல் காட்டிய ABC, DEF என்கிற இரண்டு முக்கோணங்களில் A என்கிற கோணம் D க்கும் B என்கிற கோணம் E க்கும், C என்கிற கோணம்

F க்கும் சரியாயிருந்தால் அந்த முக்கோணங்களின் பக்கங்கள் முறையே ஒன்றுக்கொன்று ஒரே தாமாஷா விலிருக்கும்.

அதாவது—

AB யானது AC க்கு எந்த தாமாஷாவிலிருக் கிறதோ அதே தாமாஷாவில் DE யானது DF க்கு இருக்கும். AB யானது BC க்கு எந்த தாமாஷாவிலிருக் கிறதோ அதே தாமாஷாவில் DE யானது EF க்கு இருக்கும். AC யானது BC க்கு எந்த தாமாஷாவிலிருக் கிறதோ அதே தாமாஷாவில் DF ஆனது EF க்கு இருக்கும்.

அதாவது—

$$\frac{AB}{DE}=\frac{AC}{DF} \text{ அல்லது } AB \times DF = AC \times DE.$$

$$\frac{AB}{BC}=\frac{DE}{EF} \text{ அல்லது } AB \times EF = BC \times DE.$$

$$\frac{AC}{BC}=\frac{DF}{EF} \text{ அல்லது } AC \times EF = BC \times DF.$$

Fig. 9-ல் B கோணம் D க்கும் C கோணம் E க்கும் சரியாயிருந்தால், ABC, ADE என்கிற முக்கோணங் களின் பக்கங்கள் முறையே ஒன்றுக்கொன்று ஒரேதாமா ஷாவிலிருக்கும்.

Fig. 9.



$$\frac{AB}{BC}=\frac{AD}{DE} \text{ அல்லது } AB \times DE = BC \times AD.$$

$$\frac{AB}{AC}=\frac{AD}{AE} \text{ அல்லது } AB \times AE = AC \times AD.$$

(*b*) அதேமாதிரி பக்கங்கள் ஒன்றுக்கொன்று ஒரே தாமாஷாவிலிருந்தால் கோணங்களும் சமமாயிருக்கும். அதாவது Fig. 8-ல் AB, AC, BC ஆனது DE, DF, EF க்கு முறையே ஒரே தாமாஷாவிலிருந்தால் A, B, C கோணங்கள் முறையே D, E, F கோணங்களுக்குச் சரியாயிருக்கும்.

Fig. 9-ல் AB, BC, AC முறையே AD, DE, AE க்கு ஒரே தாமாஷாவிலிருந்தால் B, C கோணங்கள் முறையே D, E கோணங்களுக்குச் சரியாயிருக்கும்.

குறிப்பு :—மேற்கண்ட குணாதிசயங்கள் நன்றாய் தெரிந்திருந்தால் அவைகளைக்கொண்டு சமயத்துக்கு தக்கபடி ஒரே தாமாஷாவுள்ள முக்கோணங்களை ஏற்படுத்திக்கொண்டு காணுமற்போன கற்களின் ஸ்தானங்களை கண்டுபிடிக்கவும், தடைபட்ட லயன்களை அளக்கவும், பிளாட்டு செய்த நக்ஷாக்களை சிறிது அல்லது பெரிது படுத்தவும், சிறிய ஆயுதங்களைக்கொண்டு பெரிய நக்ஷாக்கள் பிளாட்டு செய்யவும் சுலபமாயிருக்கும்.

3. Construction of right angles with the chain alone—

சங்கிலியைக் கொண்டு மாத்திரம் நேர்க்கோணம் உண்டாக்கும் விதம்—

(*a*) To erect a perpendicular on a chain line from a given point in it—

செயின் லயனில் வேண்டுமான இடத்தில் நேர்க் கோணம் உண்டாக்கும் விதம்—

(1) First method—முதல் வழி—

Fig. **10**.



AB லயனில் C என்னும் குறியில் நேர்க்கோணம் வேண்டுமானால் C யினிடமிருந்து ஷெ செயின் லயனில் 40 லிங்க்ஸ் தூரம் வைத்து D என்னுமிடத்தில் ஒரு அடையாளம்செய்து சங்கிலியின் கைப்பிடியை C யினிடம் இருக்கும் ஒரு ஆளிடம் கொடுத்து பிடிக்கச் செய்து D யினிடம் 80 லிங்க்ஸ் அரசிலையை மற்றொரு ஆளிடம் கொடுத்து C யிலிருந்து 30-வது லிங்க்ஸ் அடையாளத்தை பிடித்து சங்கிலியை தளரவிடாமல் இழுத்தால் E குறி ஏற்பட்டு ECD என்னும் நேர்க்கோணம் C யினிடம் உண்டாகும்.

(2) Another method—மற்றொரு வழி—

Fig. **11**.



C யிலிருந்து CA லயனில் 30 லிங்க்ஸ் தூரம் வைத்து D யையும், CB லயனில் அதே 30 லிங்க்ஸ் தூரம் வைத்து E யையும் ஏற்படுத்திக்கொண்டு அந்த D, E குறிகளில் இரண்டு ஆள்களை நிறுத்தி, சங்கிலியின் கைப்பிடி இரண்டையும் தலைக்கு ஒன்ருய் அவர்களிடம் கொடுத்து கெட்டியாய் பிடிக்கச்சொல்லி 50-வது லிங்க்ஸ் அரசிலையைப் பிடித்து தளரவிடாமல் இழுக்க F என்னும் குறி ஏற்படும். FCE, FCD இரண்டும் நேர்க்கோணமாகும்.

(*b*) To drop a perpendicular on a chain line from a point outside it—

ஒரு செயின் லயனின்பேரில் ஏதேனும் ஒரு கல்லுக்கு ஆப்செட்டு எடுக்கும் வழி—

(1) First method—முதல் வழி—

Fig. **12**.



AB என்னும் செயின் லயனில் C என்னும் கல்லுக்கு ஆப்செட்டு எடுக்க வேண்டியது. AB லயனில் C க்கு ஆப்செட்டு சுமாராய் வரக்கூடிய இடத்திற்கு Aபக்கமாகவே D என்னும்குறி ஒன்று வைத்துக்கொண்டு அதிலிருந்து C க்கு அளந்து மேற்சொல்லியபடி C யினிடம்

ECF என்னும் ஒரு நேர்க்கோணம் உண்டுபண்ணி நேர்க் கோண லயனாகிய CF லயன் AB லயனை சந்திக்கும் G குறியை கண்டுப்பிடித்து G யை அளக்க வேண்டியது. DG யையும் அளப்பது நலம். H என்பது ஆப்செட்டாக வேண்டிய இடமானால் ஆப்செட்டும் செயின்லயனும் அடியிற்கண்ட சூத்திரங்களால் கண்டுபிடித்துக் கொள்ளலாம்.

$$DH = \frac{CD^2}{DG}$$

$$CH = \sqrt{CD^2 - DH^2} \text{ or } \frac{CD \times CG}{DG} \text{ or } \sqrt{DH \times HG}.$$

(2) Second method—இரண்டாவது வழி—

Fig. **13.**



AC லயனில் ஒரு சங்கிலி தூரமளந்து D குறியை வைத்துவிட்டு AC லயன் பூராவையும் அளக்கவேண்டியது. D யில் ஒரு ஆளை நிறுத்தி சங்கிலியின் ஒரு வளையத்தைப் பிடித்துக்கொள்ளச்செய்து மற்றொருவன் மற்றொரு வளையத்தைப் பிடித்துக்கொண்டு சங்கிலியைத் தளரவிடாமல் இழுத்து AB லயனில் E குறிப்பில் நிற்க வேண்டியது. பிறகு AE யை அளந்து அதில் பாதி அளவை A யிலிருந்து AB லயனில் அளந்து F குறிப்பை

ஏற்படுத்திக்கொண்டு FD யை அளந்துவிடவேண்டியது. பிறகு AG, CG அளவுகளை அடியில் கண்டபடி தெரிந்துக் கொள்ளலாம்.

ACG and ADF are similar triangles and

$$AG = \frac{AC \times AF}{AD} \text{ and}$$

$$CG = \frac{AC \times DF}{AD}$$

(3) Third method—மூன்றாவது வழி—

Fig. **14 A.**



Fig. **14 B.**



A யிலிருந்து AB லயனில் 40 லிங்க்ஸ் அளந்து F குறியை வைத்துக்கொண்டு அதிலிருந்து Fig. 14(*A*) ல் காண்பித்த பிரகாரம் AFE என்னும் ஒரு சேர்க்கோ

ணம் ஏற்படுத்தவேண்டியது. Fig. 14 (B) ல் காண்பித்த பிரகாரம் FE லயனானது AC லயனைத் தாண்டிப்போகும் பக்ஷத்தில் FE லயன் AC லயனை எவ்விடத்தில் சந்திக்கிறதோ அவ்விடத்தில் D என்னும் ஒரு குறியைவைத்துக்கொண்டு DF லயனை அளக்கவேண்டியது. அல்லது Fig.14 (A) ல் கண்டபடி FE லயன் AC லயனுக்கு உள்படும் பக்ஷத்தில் F விருந்து FE லயனில் AC லயனை சந்திக்கும் வரையில் அளந்து D குறியை வைத்துக் கொள்ள வேண்டியது. பிறகு AD, AC லயன்களை அளந்து விட்டால் AG, CG லயன்களின் அளவு முன் சொல்லியபடி கண்டுக்கொள்ளலாம்.

$$AG = \frac{AF \times AC}{AD}.$$

$$CG = \frac{AC \times DF}{AD}.$$

Fig. **14 C.**



AB லயனில் Aக்கு சமீபமாய் D என்னும் ஏதேனும் ஒரு குறியிலிருந்து C க்கு நேராக ஒரு சங்கிலி தூரம்

அளந்து 50 வது, 100 வது லிங்க்ஸ்களின் இடமாகிய E,F குறிகளை அடையாளம் செய்ய வேண்டியது. பிறகு E யிடத்தில் 50 வது லிங்க்ஸ் அரசிலையை கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு, F யிடமிருக்கும் சங்கிலி கைபிடியை AB லயனில் கொண்டு வந்து எவ்விடம் வருகிறது என்று பார்த்து வந்த G குறியை குறிக்க வேண்டியது.

அப்போது DE, EF, EG ஒவ்வொன்றும் 50 லிங்க்ஸ் நீளமாயிருக்கும். DG, GF, DC லயன்களை அளக்க வேண்டியது ; அவை முறையே 70, 71, 270 வந்ததாக கொள்வோம்.

$$CH = \frac{FG \times CD}{100} = \frac{71 \times 270}{100} = 192.$$

$$DH = \frac{DG \times CD}{100} = \frac{70 \times 270}{100} = 189.$$

(4) Fourth method—நான்காவது வழி—

Fig. **15 A.**



Fig. **15 B.**



AB என்கிற லயனில் D, E என்னும் ஏதேனும் இரண்டு குறிகளை ஏற்படுத்திக்கொண்டு, DE லயனை அளந்து, மேற்படி குறிகளிலிருந்து C க்கு அளக்கவும். CDE என்னும் முக்கோணத்தைக்கொண்டு அடியில் கண்டபடி செயின்லயன் ஆப்செட்டுகளைக் கண்டுபிடிக்கலாம்.

$$DF = \frac{CD^2 + DE^2 - CE^2}{2\,DE}$$

$$CF = \sqrt{DC^2 - DF^2}.$$

CHAPTER IV.
அத்தியாயம் 4.

MEASUREMENT OF LINES.
லயன் அளவுகள்.

1. To measure on slopes or inclined surfaces—

சரிவு, மேடு, பள்ளபூமியில் சரியான அளவு அளக்க—

Fig. **16.**



சங்கிலியால் அளப்பதில் பூமி சமமாயில்லாமல் மேடு பள்ளமாயிருந்தால் சங்கிலியை சமமாய் அளப்பதற்காக மேடாயிருக்கும் பக்கம் பூமியில் சங்கிலியை வைத்து பள்ளமாயிருக்கும் பக்கம் சங்கிலியை சமமாயிருக்கும்படி தூக்கிப் பிடிக்கவேண்டியது. பின்சங்கிலிக்காரன் பள்ளத்திலிருந்தால் நட்டமுள் இரண்டு காலுக்கும் நடுவிலிருக்கும்படி நின்று கைப்பிடி முள்ளுக்கு நேராய்

இருக்கும்படி சங்கிலியை தூக்கி பிடிக்கவேண்டியது. முன்சங்கிலிக்காரன் பள்ளத்திலிருந்தால் ஒரு கல் அல்லது முள்ளை தலைகீழாய்விட்டு அது பூமியில் விழும் இடத்தில் முள் நடவேண்டியது. அதிக சரிவான பூமியாயிருந்தால் பூராசங்கிலியை அளக்காமல் கொஞ்சம் கொஞ்சமாய் மேல் சொல்லியபடி அளந்து சரியான அளவை கண்டு பிடிக்கவேண்டியது. சரிவாய் அளந்து வந்த அளவு சரியான அளவைவிட ஜாஸ்தியாயிருக்குமாதலால் அது பிரயோஜனமில்லை.

AB யின் அளவு $= 100 + 75 + 66 + 50 = 291$.

2. To align or range flags between two stations when the flags become invisible—

ஒரு ஜண்டாவிலிருந்து மற்றொரு ஜண்டாவுக்கு அளக்கக்கூடியதாக இருந்து ஜண்டாக்கள் மறைவு படுவதாயிருந்தால் லயன் கண்டுபிடித்து அளக்கும் விதம்—

(*a*) When flags are invisible from one station to another—

ஒரு ஜண்டாவிலிருந்து மற்றொரு ஜண்டா தெரியாமலிருந்தால்—

(1) Without cross-staff—

கிராஸ்ஸ்டாப் இல்லாமல்—

மத்தியில் மேடுஇருப்பதினாலாவது தோப்புமரம் முதலியதினாலாவது வெகு தூரத்தினாலாவது ஒரு ஜண்டாவிலிருந்து மற்றொரு ஜண்டா தெரியாமலிருந்தால் இரண்டு ஜண்டாவும் தெரியும்படியான நடுமத்தியில் சர்வேயரும்

இன்னொருவரும் போய் சுமார் அரை சங்கிலி தூரத்தில் சற்றேறக்குறைய உத்தேசமான லயனில் ஒருவருக்கொருவர் முகமாய் பார்த்து நின்றுக்கொண்டு ஒருவர் தனக்கு எதிரிலிருக்கும் ஜண்டாவை மற்றொருவர் மறைக்கும்படி நிற்க வைக்கவேண்டியது. இரண்டு ஆள்களும் முறையே இரண்டு ஜண்டாக்களையும் சரியாய் மறைத்தால் அதுதான் சரியான லயன். அந்த இரண்டு பேர் நின்ற இடத்தில் எதாவது ஒன்றில் மூன்றுவது ஜண்டாவை நட்டு அதைப்பார்த்து அளக்க வேண்டியது.

(2) With cross-staff—
கிராஸ்ஸ்டாப்பினால்—

உத்தேசமான லயனில் கிராஸ்ஸ்டாப்பை நட்டு ஒரே வரையின் வழியாக ஒரு பக்கம் நின்று பார்க்க ஒரு ஜண்டாவும் மற்றொரு பக்கத்தில் நின்று பார்க்க மற்றொரு ஜண்டாவும் தெரியும்படி பார்க்கவேண்டியது. முதலில் தெரியாமலிருந்தால் அப்படி தெரியும் வரையில் கிராஸ்ஸ்டாப்பை நகர்த்திக்கொண்டு போகவேண்டியது. ஒரு வரை வழியாகவே இரண்டு ஜண்டாவும் வரைக்கு மத்தியில் தெரிந்தால் கிராஸ்ஸ்டாப்பு குத்தின இடம் லயன் ஆகும். பின்பு கிராஸ்ஸ்டாப்பு குத்தின இடத்தில் ஒரு ஜண்டாவை நட்டு அந்த ஜண்டாவை பார்த்து அளந்து கொண்டு வரலாம்.

(*b*) When flags become invisible after a certain length—

கொஞ்சதூரம் அளந்த பின்பு ஒரு ஜண்டாவோ அல்லது இரண்டு ஜண்டாக்களுமோ மறைவுபடும் கேசகளில் அளக்கும் விதம்—

கொஞ்சதூரம் அளந்த பின்பு முன் ஜண்டா மாத்திரம் மறைந்து பின் ஜண்டா தெரிவதாயிருந்தால் பின் சங்கிலிக்காரனை நட்ட முள்ளினிடம் சரியாய் நிற்த்து வைத்து அவன் பின் ஜண்டாவை மறைக்கும்படி முன் சங்கிலிக்காரன் தானே ஒதுங்கி நின்று நேர்பார்த்து முள்நட்டு அளந்துக்கொண்டு போகலாம். அல்லது முன் ஜண்டா மறைவுபடுவதற்குமுன் லயனில் நடுவில் வேறொரு ஜண்டாவை நட்டு அதைப்பார்த்து அளந்துக் கொண்டு போகலாம். இரண்டு ஜண்டாவும் மறைவுபடுவதாயிருந்தால் கடைசி ஜண்டாவும் மறைவுபடுவதற்கு முன் லயனில் வேறொரு ஜண்டாவை நட்டு முன் சொன்ன மாதிரி அளந்துக்கொண்டு போகவேண்டியது.

3. To measure obstructed lines—

தடைப்படும் லயனை அளக்க—

(A) When the stations are visible from each other but not chainable—

ஜண்டா தெரிந்து ஒரு ஸ்டேஷனிலிருந்து மற்றொரு ஸ்டேஷனுக்கு அளக்கக்கூடாத கேசுகளில் அளக்கும் விதம்—

(*a*) With the aid of cross-staff—

கிராஸ்ஸ்டாப்புடன்—

(1) First method—By forming a right-angled parallelogram.

Fig. 17.



A யிலிருந்து B க்கு C வரையில் அளந்த பின்னிட்டு தடை ஏற்பட்டால் C யிடம் கிராஸ்ஸ்டாப்பை நட்டு ஒரு வரை வழியாய் AB லயனைப்பார்த்துக் கொண்டு மற்றொருவரைக்கு நேராக தடை நீங்கும் தூரத்தில் D குறிப்பில் ஒரு ஜண்டாவை நிறுத்தவேண்டியது. பிறகு C குறிப்பில் ஒரு ஜண்டாவை நிறுத்தி CD என்ற லயனை அளந்து D யினிடம் கிராஸ்ஸ்டாப்பை நிறுத்தி DE ஆனது CD க்கு நேர்க்கோணமாகும்படியாயும் தடை விலகும்படியாயும் E குறியை கண்டுபிடித்து அதில் ஜண்டா போடவேண்டியது. D யிலும் ஜண்டாவை நிறுத்தி DE யை அளக்கவேண்டியது. பின்பு E ல் கிராஸ்ஸ்டாப்பை நிறுத்தி ED லயனுக்கு EF நேர்க்கோணமாகும்படி F குறியை கண்டுபிடிக்க வேண்டியது. E லும் ஜண்டாபோட்டு EF லயனில் CD க்கு வந்த அளவை அளக்கவேண்டியது. நாம் அளந்தவைகள் எல்லாம் சரியாயிருந்தால் F என்னும் குறி AB லயனில் வரும். அப்பால் FB யை அளக்கவேண்டியது. AB என்னும் அளவானது AC, DE, FB இந்த மூன்று அளவுகளையும் கூட்டிவந்த தொகையாகும்.

Fig. **18.**



Fig. **19**.



A யிலிருந்து B க்கு அளப்பதற்கு பூராவும் தடையானல் A யினிடம் கிராஸ்ஸ்டாப்பை ஊன்றி முன் சொல்லியபடி D,E என்ற குறிகளை ஏற்படுத்தி அளக்க வேண்டியது.

(2) Second method—By forming a right angle outside the line—

இரண்டாவது வழி—

Fig. **20**.



A யிலிருந்தும் B யிலிருந்தும் நேராக அளக்கக் கூடியதாயும் கிராஸ்ஸ்டாப்பை நிறுத்தினல் A ஜண்டா ஒரு வரியிலும் B ஜண்டா அதற்கு நேர்க்கோண

வரையிலும் தெரியும்படியாயுமிருக்கப்பட்ட C என்னும் ஏதேனும் ஒரு இடத்தைக் கண்டு பிடிக்கவேண்டும். பின்பு AC யையும் BC யையும் அளக்கவேண்டும். அதிலிருந்து AB யை அடியில் கண்ட சூத்திரத்தால் கண்டு பிடிக்கலாம்.

$$AB = \sqrt{AC^2 + BC^2}.$$

(3) Third method—By forming an isosceles triangle—

மூன்றுவது வழி—

Fig. **21**.



இரண்டாவது வழியில் சொன்னபடி C என்னும் ஸ்தானத்தைக் கண்டு பிடித்த பின்பு AC யை அளந்து அதே லயனில் CD என்பது AC க்கு சரியாயிருக்கும்படி அளக்கவேண்டியது. அப்பால் DB யை அளக்க DB அளவு AB க்கு சரியாயிருக்கும்.

(4) Fourth method—By forming a right angle on the line—

நான்காவது வழி—

Fig. **22.**



A யினிடத்தில் கிராஸ்ஸ்டாப்பை நிறுத்தி ABக்கு நேர்க்கோணமாக தடை நீங்கும் வரையில் AC லயனை அளந்து பிறகு CB லயனையும் அளக்க வேண்டியது. அதிலிருந்து AB யை அடியில் கண்ட சூத்திரத்தால் கண்டு பிடிக்கலாம்.

$$AB = \sqrt{BC^2 - AC^2}.$$

(*b*) Without the aid of cross-staff—

கிராஸ்ஸ்டாப்பு இல்லாமல் அளக்கும் விதம்—

(1) First method—By forming equal triangles.

Fig. **23.**



AB என்பது அளக்கவேண்டிய கோடு.

X அடையாள மிட்டது குளம். A,B என்ற இரண்டு இடங்களுக்கும் நேராக கோடுகள் அளக்கக்கூடிய C என்கிற ஏதாவது ஒரு இடத்தை அடையாளம் செய்து கொள்ளவும். AC என்ற கோட்டை அளந்து அதே லயனில் CD என்ற கோட்டை AC என்கிற கோட்டுக்கு சரியாயிருக்கும்படி அளக்க வேண்டியது. அப்பால் BC என்கிற கோட்டை அளந்து அதே லயனில் CE என்கிற கோட்டை BC லயனுக்கு சரியாயிருக்கும்படி அளக்க வேண்டும். இப்படி அளப்பதில் BC, CE யும் AC, CD யும் தொடர்ந்த நேர்க்கோடுகளாக யிருக்கவேண்டும். இப்போது D யிலிருந்து E க்கு அளந்தால் அது AB என்கிற கோட்டின் அளவுக்கு சரியாயிருக்கும்.

(2) Another method—By forming similar triangles—

Fig. **24**.



A,B இரண்டு இடங்களினின்றும் நேராக அளக்கக் கூடியதாக C என்கிற இடத்தை கண்டு பிடித்து AC BC யை அளக்கவேண்டியது. பின்பு C யிலிருந்து CA

லயனில் CA யின் பாதி தூரத்தை அளந்து D என்னு மிடத்தில் ஜண்டாவை போடவேண்டியது. அதேமாதிரி CB லயனில் CB க்கு பாதி தூரத்தை C யிலிருந்து அளந்து E என்னும் ஸ்தானத்தில் ஜண்டா போட வேண்டியது. DE யை அளந்து வந்த அளவை இரட்டிப்பு செய்தால் AB லயன் அளவு கிடைக்கும்.

குறிப்பு:—C யிலிருந்து பாதி அளக்கமுடியாவிட்டால் CA, CB அளவுகளில் சவுகரியப்படி மூன்றில் ஒரு பங்காவது நாலில் ஒரு பங்காவது அளந்து D,E குறிகளை ஏற்படுத்தி DE யை அளந்து மூன்றிலோ அல்லது நாலிலோ பெருக்கினால் AB யின் அளவு கிடைக்கும்.

Fig. **25.**



Fig. **26.**



(*B*) To find the measurement between two stations which are both invisible and not chainable—

ஒரு ஜண்டாவிலிருந்து மற்றொரு ஜண்டா வேலி புதர் முதலானவைகளால் காணக்கூடாமலும் அளக்கக் கூடாமலும் இருக்கப்பட்ட கேசுகள்—

(*a*) With the aid of cross-staff—

கிராஸ்ஸ்டாப்புடன்—

முன் 3-வது பாரா *A* (*a*) 2, 3 ல் சொல்லியபடியும் பின் வரும் வழிப்படியும் AB அளவு கண்டு பிடிக்கலாம்.

Fig. **27**.



(1) C D என்னும் ஏதேனும் ஒரு லயனில் A, B என்கிற இரண்டு கற்களுக்கும் ஆப்செட்டு AE, BF என்பதை அளந்து AB லயன் அளவை அடியில்கண்ட சூத்திரத்தால் கண்டுபிடிக்கலாம்—

$$AB = \sqrt{EF^2 + (BF - AE)^2}.$$

(2) By forming a parallelogram—

மற்ருெரு வழி—

Fig. **28**.



முன் பாராவில் சொல்லியபடி CD என்கிற வதேனும் ஒரு லயனில் AE, BF என்கிற ஆப்செட்டை எடுக்கும்போது E,F என்கிற இடங்களில் ஜண்டாக்கள் நிறுத்திக் கொள்ளவேண்டியது. BF என்கிற சிறிய ஆப்செட்டு லயனில் BG யானது AE க்கு சரியாகும்படி G வரையில் அளந்து பிறகு GE யை அளந்தால் AB க்கு சரியாயிருக்கும்.

Fig. **29**.



அல்லது AE என்கிற நீள லயனில் BF க்கு சரியாய் AG யை அளந்து GF யை அளந்தால் அது AB க்கு சரியாயிருக்கும்.

Fig. **30**.



அல்லது BF என்கிறதை அதே லயனில் G வரைக்கும் அளந்து BG க்கு சரியாய் AH யை AE லயனில் அளந்து GH யை அளந்தாலும் AB க்கு சரியாயிருக்கும்.

குறிப்பு:—இந்த மூன்றிலும் எது சவுகரியமோ அப்படி அளக்கலாம்.

(3) Another method—மற்றொரு வழி—

Fig. **31**.



Fig. 31 ல் காண்பித்தபிரகாரம் C ஸ்தானத்தில் கிராஸ்ஸ்டாப்பை நிறுத்தி ஒரு வரை வழியாய் A யையும் மற்றொரு வரை வழியாய் B யையும் பார்த்து நேர்க்கோணம் செய்துக்கொண்டு AC யை அளக்க வேண்டியது. பிறகு B யில் கிராஸ்ஸ்டாப்பை நிறுத்தி ஒரு

வரை வழியாய் C யைப் பார்த்துக்கொண்டு மற்ஜெரு வரைக்கு நேராக ஆள் நிறுத்தி AC க்கு சரியாயிருக் கும்படி BD யை அளக்க வேண்டியது. DC யை அளந்துவந்த அளவு AB க்கு சரியாயிருக்கும்.

(*b*) Without the aid of cross-staff—

கிராஸ்ஸ்டாப்பில்லாமல்—

Fig. 23 முதல் 26 வரையில் காண்பித்த பிரகாரம் கிராஸ்ஸ்டாப்பில்லாமல் அளவு கண்டு பிடிக்கலாம்.

(*C*) To measure between two visible but inaccessible points—

கண்ணுக்கு தெரியக்கூடியதாயிருந்து பக்கத்தில் நெருங்கமுடியாத இரண்டு ஜண்டாக்களின் மத்திய அளவு கண்டுபிடிக்க—

(*a*) When only one of the points is inaccessible—

ஒரு ஜண்டாவுக்கு மாத்திரம் சமீபத்தில் போகக் கூடியதாயிருந்து மற்ஜெரு ஜண்டாவுக்கு சமீபத்தில் போகக்கூடாததாயிருந்தால்—

(1) By forming equal right-angled triangles—

Fig. 32.



AB என்பது அளக்கவேண்டிய கோடு. A அடையாளமிட்ட இடத்தில் கிராஸ்ஸ்டாப்பை சரியாக நிறுத்தி AB என்கிற கோட்டிற்கு நேர்க்கோணமாகும்படி AC என்கிற கோட்டை அளக்கவேண்டும். AC என்கிற கோட்டை 1 அல்லது 2 சங்கிலி நீளம் அளந்து அதே லயனில் CD என்கிற கோடானது AC என்கிற கோட்டிற்கு சரியாயிருக்கும்படி அளந்து D குறியை ஏற்படுத்திக் கொள்ளவேண்டியது. அப்பால் D என்கிற இடத்தில் கிராஸ்ஸ்டாப்பை சரியாக நிறுத்தி ACD என்கிற கோட்டிற்கு நேர்க்கோணமாகும்படி DE என்கிற கோட்டை அளக்கவேண்டும். அப்படி அளப்பதில் B,C,E என்கிற மூன்று அடையாளங்களும் ஒரே லயனில் வரும் வரையில் அளக்கவும். DE அளவானது AB அளவுக்கு சரியாயிருக்கும்.

(2) By forming similar right-angled triangles—

(i) First method—முதல் வழி—

Fig. 33.



AB யின் அளவு வேண்டியது. A என்கிற குறியில் கிராஸ்ஸ்டாப்பை நிறுத்தி AB லயனுக்கு நேர்க்கோண மாகும்படி E என்கிற இடத்தில் ஒரு ஜண்டாவை நிறுத்த வேண்டியது. A யிலிருந்து BA என்கிற லயனில் அளந்து D என்னும் குறியை சவுகரியமானபடி ஏற்படுத்த வேண்டியது. A என்னும் குறியில் ஒரு ஜண்டாவை நிறுத்தி AE லயனில் கொஞ்சதூரம் அளந்து கிராஸ்ஸ்டாப்பினால் BCD நேர்க்கோணமாகும்படி C குறிப்பை கண்டு பிடிக்கவேண்டியது. பிறகு AB யின் அளவை அடியில் கண்ட சூத்திரத்தால் கண்டுகொள்ளலாம்—

$$AB = \frac{AC^2}{AD}\ ;\ AB = \frac{120 \times 120}{80} = 180.$$

(ii) Second method—இரண்டாவது வழி—

Fig. 34.



A யிடத்தில் கிராஸ்ஸ்டாப்பை நிறுத்தி BA க்கு நேர்க்கோணமாகும்படி சவுகரியமான தூரத்தில் C குறியை எற்படுத்திக் கொள்ளவேண்டியது. பின்பு BA லயனில் சவுகரியமான இடத்தில் D என்னும் குறியை எற்படுத்தி கிராஸ்ஸ்டாப்பை அவ்விடத்தில் நிறுத்தி DE என்னும் நேர்க்கோடு DA க்கு நேர்க்கோணமாகும்படியாயும் E என்னும் குறி BC என்னும் லயனில் நேராயிருக்கும்படி ஸ்தாபிக்கவேண்டும். அப்பிறம் DE யை அளக்கவேண்டியது. AB அளவை அடியிற்கண்ட சூத்திரத்தால் கண்டுபிடிக்கலாம்—

$$AB = \frac{AC \times AD}{ED - CA} = \frac{100 \times 80}{126 - 100} = 308.$$

(3) By forming a rhombus without the aid of cross-staff—

கிராஸ்ஸ்டாப்பில்லாமல் அளக்கும் விதம்—

Fig. **35.**



BA லயனில் 50 லிங்க்ஸ் தூரத்தில் ஒரு குறி C ஏற்படுத்தி அவ்விடத்தில் ஒரு முளை அடிக்கவேண்டியது. அந்த அளவை A யிடத்திலிருந்து ஏதேனும் ஒரு சவுகரியமான திக்கில் அளந்து D என்னும் குறியை ஸ்தாபிக்கவேண்டியது. அப்புறம் C,D என்னும் குறிகளில் இரண்டு ஆள்களை நிறுத்தி அவர்கள் ஒவ்வொருவர் கையிலும் சங்கிலியின் ஒவ்வொரு பிடியை கொடுக்கவேண்டியது. 50-வது லிங்க்ஸில் நாம் பிடித்து தளர்ச்சி யில்லாமல் இழுத்து ஒரு முளையை E என்னும் குறியில் அடிக்கவேண்டியது. E ல் நின்றுக்கொண்டு AD லயனில் இருக்கும்படியாயும் B க்கு நேராய் மறைக்கும்படியாயும் ஒரு ஆளை F என்னும் இடத்தில் நிறுத்த வேண்டியது. AB என்பதை அடியில் கண்ட சூத்திரத்தால் கண்டு பிடிக்கலாம்—

$$AB = \frac{ED \times AF}{DF} = \frac{50 \times 38}{12} = 158.$$

(*b*) When both the points are inaccessible—

இரண்டு ஜண்டாக்களின் சமீபத்திலும் போகக் கூடாமலிருந்தால்—

(1) First method—முதல் வழி—

Fig. **36**.



CD என்னும் ஏதேனும் ஒரு லயனில் A,B என்னும் இரண்டு குறிகளுக்கு ஆப்செட்டு வரும் E,F குறிகளை கண்டுபிடித்து EF யை அளக்கவேண்டியது. EF ன் மத்தியகுறியாகிய G யை கண்டுபிடித்து அதில் ஒரு முளையை அடிக்கவேண்டியது. பிறகு AE லயனிலும் BG லயனிலும் இருக்கும்படி H என்னும் குறியை கண்டு பிடித்து H னிடம் ஒரு முளையை அடிக்கவும். அதே மாதிரியாக BF லயனிலும் AG லயனிலும் இருக்கும்படி K என்னும் குறியை கண்டுபிடிக்கவும். HK அளவு AB க்கு சரியாகும்.

(2) Another method—மற்றொருவழி—

Fig. **37**.



CD என்னும் ஏதேனும் ஒரு லயனில் A என்னும் குறிக்கு நேர்க்கோணமாகும்படியான E குறியை கண்டு பிடித்து AE என்னும் ஆப்செட்டு அளவை Fig. 33 ல் உதகரித்தபடி கண்டுபிடிக்க வேண்டியது. அதேமாதிரி CD லயனிலேயே BH ஆப்செட்டின் அளவை கண்டு பிடிக்கவேண்டியது. AB லயன் அளவை அடியில் கண்ட சூத்திரத்தால் கண்டுபிடிக்கலாம்—

$$AB = \sqrt{EH^2 + (AE - BH)^2}.$$

(*c*) When more than two points are inaccessible—

The points may be reproduced on the other side and the distances between them found out.

தாண்டக்கூடாத ஆற்றின் ஒரு பக்கத்திலுள்ள புலத்தின் உருவத்தை அதே பரிமாணத்தில் மற்றொரு பக்கம் உண்டுபண்ணி அளக்கும் விதம்—

Fig. **38.**



Fig. 38-ல் கண்டபடி A B C D E என்கிற புலம் ஆற்றின் ஒரு புறத்திலிருக்கிறது. அதின் உருவத்தை மற்றொரு பக்கத்தில் உண்டு பண்ணவேண்டும்.

ஆற்றிற்கு இந்த பக்கத்தில் XY என்னும் ஒரு லயனை ஏற்படுத்தி அதில் O என்னும் குறியை ஏற்படுத்த வேணும். O விலிருந்து X க்கு அளந்துக்கொண்டு போய் C, D, B, E, A குறிகளுக்கு ஆப்செட்டு ஏரக்கூடிய

இடங்களை கண்டு பிடிக்கவேண்டும். மேற்சொன்ன குறிகளுக்கு முறையே 50, 70, 110, 200, 240 லிங்ஸ் களில் ஆப்செட்டு வருவதாக வைத்துக் கொள்ளுவோம். மறுபடி O குறியிலிருந்து எதிர் பக்கத்தில் அதாவது OY லயனில் அதே அளவுகளை அளந்து குறிகள் ஏற் படுத்திக் கொள்ளவேண்டும். பின்பு இந்த குறிகளில் ஒன்றின்பின் ஒன்ருய் கிராஸ்ஸ்டாப்பை நட்டு OY லய னுக்கு நேர்க்கோணமாகும்படி ஒரு ஆளை ஆப்செட்டு லய னில் போகச்சொல்லி அந்த ஆப்செட்டு அக்கரையில் எந்த கல்லுக்கு சம்மந்தப்படுகிறதோ அந்த குறியும் O குறியும், ஆளும் ஒரே லயனிலிருக்கும்படி நிற்க சொல்ல வேண்டும். பின்பு ஆள் நிற்கும் குறியில் முளை யடிக்க வேண்டியது. இவ்விதமாக மற்ற குறிகளையும் ஏற் படுத்திக்கொண்டால் புலத்தின் உருவம் இந்த பக்கத்தில் ஏற்பட்டுவிடும். இதைக்கொண்டு வேண்டிய அளவுகளை கண்டு பிடிக்கலாம்.

4. To take offsets on an obstructed line by getting a parallel line—

அளக்கமுடியாத லயன்பேரில் வரும் ஆப்செட்டுகளை கண்டுபிடிக்கும் விதம்—

(*a*) By forming a rectangle when the flags are visible from each other—

G லயனில் ஜண்டாக்கள் ஒன்றிலிருந்து மற் ருென்று தெரிந்து அளக்கக்கூடாத குளம் முதலியவை களால் லயன் தடைபட்டால் அப்போது அளந்து ஆப்செட்டு எடுக்கும் விதம்—

Fig. **39**.



Fig. 17-ல் உதகரித்த பிரகாரம் C, D, E, F குறிகளை எற்படுத்திக்கொண்டு DE லயனில் H, K கற்களுக்கு ஆப்செட்டுகள் எடுக்கவேண்டியது. ஆப்செட்டு அளவுகள் கண்டுபிடிக்கும் விதம்—

கல்.	செயின் லயன்.	ஆப்செட்டு.
G	AN	GN
H	AC + DL	CD + HL
K	AC + DM	CD + KM

Fig. **40**.



அல்லது Fig. 18-ல் உதகரித்த பிரகாரம் C, D குறிகளை எற்படுத்திக்கொண்டு CD லயனில் E, F, G, H, Y கற்களுக்கு ஆப்செட்டுகள் எடுக்கவேண்டும்—

கல்.	செயின் லயன்.	ஆப்செட்டு.
E	CK	AC+EK
F	CL	AC+LF
G	CM	AC+MG
H	CN	AC+HN
Y	CX	AC—XY

(*b*) By forming similar triangles when the flags are invisible from each other—

டயாக்கனல் லயனில் ஒரு ஜண்டாவிலிருந்து மற்றொரு ஜண்டா தெரியாவிட்டால் அந்த டயாக்கனல் லயன்பேரில் எடுக்கவேண்டிய ஆப்செட்டு அளவுகளை கண்டுபிடிக்கும் விதம்—

Fig. **41.**



A, B இரண்டு கற்களிலிருந்தும் அளக்கக்கூடிய C என்னும் எதேனும் ஒரு குறியில் நின்றுகொண்டு AC, BC இரண்டு லயன்களையும் அளவிட்டு மேற்படி லயன்களின் நடுமெத்திய குறிகளாகிய D, E என்னும் இரண்டு குறிகளை கண்டுபிடித்து முளை அடிக்கவேண்டியது. இந்த DE

லயனில் C க்கு ஆப்செட்டு எடுத்து, மேற்படி லயனை நீட்டி A கல்லுக்கு ஆப்செட்டு எடுக்கவேண்டியது. AF ஆப்செட்டானல் AF,CP க்கு சரியாயிருக்கும். F குறியிலிருந்து FE லயனில் அளவிட்டுக்கொண்டுபோய் H,K, S,L கற்களுக்கும் B க்கும் ஆப்செட்டு எடுக்கவேண்டியது. BG, AF, CP லயன்கள் ஒன்றுக்கொன்று சரியாயிருக்கும். AB லயன் அளவு FG அளவுக்குச்சரி. மற்ற ஆப்செட்டு செயின் லயன் அளவுகளை அடியில் விவரித்தபடி கண்டுபிடிக்கலாம்—

கல்.	செயின்லயன்.	ஆப்செட்டு.
H	FN	AF+HN
K	FO	AF+OK
S	FT	AF+ST
L	FQ	AF+QL

(c) By offsetting both the stations on any line—

மற்றொரு வழி—

Fig. 42.



ஏதேனும் CD என்னும் லயனில் A,B கற்களுக்கு ஆப்செட்டுகள் AE, BF எடுக்கவேண்டியது. மேற்படி ஆப்செட்டுகளில் அதிக நீளமாயிருக்கும் BF லயனி

விருந்து AE ன் தூரத்திற்கு சரியாய் BG யை அளந்து G யினிடம் ஜண்டா போடவேண்டியது. EG லயனில் A, J, K, L, M, N, B கற்களுக்கு ஆப்செட்டு எடுக்க வேண்டியது. A யின் ஆப்செட்டு விழும் H குறியி விருந்து B யின் ஆப்செட்டு விழும் T குறிவரையில் நீளம் AB க்கு சரி. மற்ற குறிகளுக்கு ஆப்செட்டுகள் அடியில் கண்டபடி கண்டுபிடிக்க வேண்டியது—

கல்.	செயின் லயன்.	ஆப்செட்டு.
J	HP	AH − PJ
K	HO	AH + OK
L	HQ	AH + QL
M	HR	AH + RM
N	HS	AH + SN

குறிப்பு:—Figs. 28, 29-ல் காட்டியபடி A, B கற்களிலிருந்து CD லயனில் எடுக்கப்பட்ட ஆப்செட்டுகள் சவுகரியப்படி நீளப்படுத்தியோ, அல்லது குறுக்கியோ சரிசெய்து டயாக்னல் லயன் விடலாம்.

(*d*) By forming a right-angled parallelogram—

மற்றொரு வழி—

Fig. 43.



CA,CB நேர்க்கோணம் உண்டாகும்படி C என்னும் ஏதேனும் குறியை ஏற்படுத்தி CA, CB யை அளக்க வேண்டியது.

$$\frac{CA^2}{BC}=\frac{120^2}{800}=18$$

எவ்வளவாகிறதென்று கண்டுபிடிக்க வேண்டியது. வந்த ஈவு எவ்வளவோ (18-லிங்க்ஸ்) அவ்வளவு வைத்து BC லயனை நீட்டி D வரையில் அளக்கவேண்டியது. D குறியில் கிராஸ்ஸ்டாப்பை நிறுத்தி A கல் ஒரு வரையில் தெரியும்படி திருப்பவேண்டியது. அதற்கு நேர்க்கோணவரைக்கு நேராக சுமாராய் AB க்குள்ளதைவிட ஜாஸ்தியாயிருக்கும்படி P என்னும் ஒரு குறியை ஸ்தாபிக்கவேண்டியது. DP லயனில் வேண்டிய கற்களுக்கும் B க்கும் ஆப்செட்டுகள் எடுக்கவேண்டியது. B யின் ஆப்செட்டாகிய BE யானது AD க்கும் DE யானது AB க்கும் சரியாயிருக்கும். மற்ற ஆப்செட்டுகளை அடியில்கண்டபடி கண்டு கொள்ளலாம்—

கல்.	செயின் லயன்.	ஆப்செட்டு.
F	DL	AD + LF
G	DM	AD + GM
H	DN	AD − HN
K	DO	AD − KO

(*e*) By making alternate angles right angles—

மற்றொரு வழி—

Fig. **44.**



C என்னுமிடத்தில் BC, CA நேர்க்கோணமாகும்படி செய்து CB யை அளந்து C யில் ஜண்டாவை போட்டு விட்டு A யினிடம் போய் AC லயனுக்கு நேர்க்கோண மாக AD யை செய்து BC யின் தூரத்திற்கு சரியாய் AD யை அளந்து DC லயன் ஏற்படுத்த வேண்டியது. இந்த லயனை இருபுறத்திலும் நீட்டி அதில் A, B கற்களுக்கும் L, M, N, O, P கற்களுக்கும் ஆப்செட்டு எடுத்து அதி லிருந்து செயின் லயன் ஆப்செட்டு அளவுகளை மேல் சொன்னபடி கண்டு பிடிக்க வேண்டியது.

5. To measure obstructed offsets—

தடைபடும் ஆப்செட்டுகளை அளக்கும் விதம்—

(*a*) When the offset point is accessible but not visible from the chain line—

ஆப்செட்டு ஜண்டா சமீபத்தில் போகக்கூடியதா யிருந்து செயின் லயனிலிருந்து மறைவுபடும் கேசுகளில்

Fig. 45.



AB லயனில் C என்னும் கல்லுக்கு ஆப்செட்டு வேண்டியது மறைக்கிறது. AB லயனில் D என்னும் ஏதேனும் ஒரு குறியில் கிராஸ்ஸ்டாப்பை நிறுத்தி AB க்கு நேர்க்கோணமாகும்படி E என்னும் குறியை வேண்டிய தூரத்தில் ஸ்தாபிக்க வேண்டியது. இந்த D குறியில் ஒரு ஜண்டாவை நிறுத்தி DE லயனை அளந்துக்கொண்டு போய் அந்த லயனில் C க்கு CF ஆப்செட்டு எடுக்க வேண்டியது. C குறிப்பிற்கு செயின் லயன் DA + CF யாகவும், ஆப்செட்டு DF ஆகவும் இருக்கும்.

(*b*) When the offset point is visible but not accessible—

செயின் லயனிலிருந்து பார்க்கக்கூடியதாயிருந்தாலும் ஆறு, பரவலான நாகதாளி முதலியவைகளால் தடைபட்டு அளக்கக்கூடாத ஆப்செட்டு கண்டுபிடிக்கும் விதம்—

Fig. **46.**



(1) Fig. 33-ல் கண்டபடி AB லயனில் C குறிக்கு ஆப்செட்டு வரக்கூடிய D என்னும் குறியை கண்டு பிடித்து CD லயனில் E என்னும் குறியை சவுகரியமான தூரத்தில் கண்டுபிடித்து DE லயன் அளந்து E குறியில் ஒரு ஆளை நிறுத்தவேண்டியது. AB லயனில் ஒரு கிராஸ்ஸ்டாப்பை நிறுத்தி CFE நேர்க்கோணமாகும்படி F குறியை கண்டுபிடித்து DF யை அளக்கவேண்டியது.

$CD = \frac{DF^2}{DE}$ என்கிற சூத்திரத்தால் CD யின் அளவை அறியலாம்.

(2) Another method—With a cross-staff cut to 45°.

மற்றொருவழி—

Fig. **47.**



கிராஸ்ஸ்டாப்பில் நேர்க்கோணத்துக்கு பாதியான 45° கோணம் வைத்து வரை அருத்திருந்தால் முதலில் AB லயனில் C என்னும் குறிக்கு நேர்க்கோணம் வரக் கூடிய ஸ்தானமாகிய D யென்னும் குறியை கண்டுபிடித் துக் கொள்ளவேண்டியது. பிறகு AB லயனில் கொஞ்ச தூரம் அளந்துக்கொண்டுபோய்கிராஸ்ஸ்டாப்பை நிறுத்தி ஒரு வரை வழியாய் AB லயனையும் அதற்கு 45° வரை வழியாய் C குறிப்பையும் பார்க்கவேண்டியது. E என் னும் குறிப்பில் அந்தமாதிரி தெரியும் பட்சத்தில் AD செயின் லயன் அளவாகவும் DE ஆப்செட்டு அளவாகவும் வைத்துக்கொள்ளலாம், DE ஆனது CD க்கு சமான மாயிருக்கும்.

6. To connect on an immeasurable traverse line a purtal line from a Theodolite station—

A என்னும் தியாடலேட் கல்லிலிருந்து பர்ட்டால் லயன் K என்னும் ஒரு மரத்திற்கு நேராய் அளந்துக் கொண்டு போகும்போது BC என்னும் தியாடலேட் லய னில் அளக்கக்கூடாத மறைவாலுல் மேற்படி BC லய னில் AK லயன் சந்திக்கும் அளவு கண்டுபிடிக்கும் விதம்.

Fig. **48**.



AK லயனில் B,C ஜண்டாக்கள் தெரியக்கூடியதாயும் அளக்கக்கூடியதாயும் D என்னும் குறியில் நின்று DB, DC யை அளந்து ஒவ்வொன்றிலும் சரிபாதிகளாகிய E,F குறிகளை கண்டுபிடித்து இந்த EF லயனில் AD லயன் சந்திக்கும் G குறியை கண்டுபிடிக்க வேண்டியது. BC யை AD சந்திப்பது H என்னும் குறியிலென்று வைத்துக்கொண்டால் அடியில் கண்ட சூத்திரத்தினால் நமக்கு வேண்டிய சந்திப்பு அளவுகளை கண்டு பிடித்துக் கொள்ளலாம்—

$$BC = 2\ EF\ ;\ CH = 2\ GF.$$

$$DH = 2\ DG\ ;\ BH = 2\ EG.$$

7. To compute offset and chain distances on a given line from those taken on another line not parallel to the given line—

ஒரு லயன் ஆப்செட்டினின்றும் மற்றொரு லயன் ஆப்செட்டு கண்டுபிடிக்க—

Fig. 49.



Fig. 49-ல் AC என்னும் லயனில் D, E, F, B கற்களுக்கு DG, EH, FK, BC ஆப்செட்டுகள் முறையே எடுக்கப்பட்டிருக்கிறது. இவைகளைக்கொண்டு மேற்படி D, E, F கற்களுக்கு AB லயனில் DL, EM, FN ஆப்செட்டுகளும் செயின் லயன் அளவுகளும் கண்டுபிடிக்க வேண்டிய விதம்—

கல். செயின் லயன். ஆப்செட்டு.

$$D; AL=\frac{(AG\times AC)-(DG\times CB)}{AB}; DL=\sqrt{AG^2+DG^2-AL^2}$$

$$E; AM=\frac{(AH\times AC)-(EH\times CB)}{AB}; EM=\sqrt{AH^2+EH^2-AM^2}$$

$$F; AN=\frac{(AK\times AC)-(FK\times CB)}{AB}; FN=\sqrt{AK^2+FK^2-AN^2}$$

Fig. 50.



Fig. 51.



Figs. 50, 51 - ல் AB லயனில் D, E, F, C கற்களுக்கு DG, EH, FK, CB ஆப்செட்டுகள் எடுக்கப்பட்டிருக்கிறது. இவைகளைக்கொண்டு மேற்படி D, E, F கற்களுக்கு AC லயனில் ஆப்செட்டு கண்டுபிடிக்க வேண்டிய விதம்—

கல். செயின் லயன். ஆப்செட்டு.

D; $AL = \frac{(AG \times AB) + (DG \times BC)}{AC}$; $DL = \sqrt{AG^2 + DG^2 - AL^2}$

E; $AM = \frac{(AH \times AB) + (EH \times BC)}{AC}$; $EM = \sqrt{AH^2 + EH^2 - AM^2}$

F; $AN = \frac{(AK \times AB) + (FK \times BC)}{AC}$; $FN = \sqrt{AK^2 + KF^2 - AN^2}$

Fig. **52**.



Fig. 52-ல் E, F, G, H கற்களுக்கு CD என்னும் லயனில் ஆப்செட்டுகள் எடுத்திருப்பதைக் கொண்டு ஷை கற்களுக்கு AB என்னும் லயனின்பேரில் வரும் செயின் லயன் ஆப்செட்டு அளவுகளைக் கண்டுபிடிக்கும் விதம்—

BU லயன் அளவை எல்லா ஆப்செட்டினின்றும் கழிக்க அது BS என்னும் லயன்பேரில் ஆப்செட்டாய் விடும். அதினின்றும் AB யின்பேரில் ஆப்செட்டு மேலே Figs. 49, 50 - ல் சொல்லியபடி கண்டுபிடித்துக் கொள்ளலாம்.

அதேமாதிரி AB லயன்பேரில் எடுத்த ஆப்செட்டு களைக்கொண்டு CD என்னும் லயன்பேரில் வரும் ஆப்செட்டுகளை கண்டுபிடித்துக் கொள்ளலாம்.

8. Calculation of length not actually measured—

How to calculate the distance between any two points offsetted on either side of a purtal or diagonal line—

ஒரு பர்ட்டால் அல்லது டயாக்கனல் லயனுக்கு ஒரே பக்கத்திலாவது எதிர் பக்கங்களிலாவது எடுக்கப் பட்டிருக்கும் ஆப்செட்டுகளிலிருந்து அந்த குறிகளுக் குள்ள தூரத்தை கண்டுபிடிக்கும் வழி—

(*a*) டயாக்கனல் லயனுக்கு ஒரே பக்கத்தில் இரண்டு கற்களுக்கு ஆப்செட்டு எடுத்திருந்தால் ஷை ஆப்செட்டுகளின் வித்தியாசத்தின் வர்க்கத்தையும் அந்த ஆப்செட்டுகளின் மத்தியிலுள்ள செயின் லயன் அளவின் வர்க்கத்தையும் கூட்டிய தொகையின் மூலம் ஷை இரண்டு கற்களுக்கும் உண்டான தூரம்.

உதாரணம்—

Fig. **53**.



$$AC = \sqrt{100^2 + 90^2} = \sqrt{10000 + 8100} = \sqrt{18100} = 135.$$

$$CD = \sqrt{(199-100)^2 + (90-70)^2} = \sqrt{99^2 + 20^2} = \sqrt{9801 + 400} = \sqrt{10201} = 101.$$

$$AD = \sqrt{199^2 + 70^2} = \sqrt{39601 + 4900} = \sqrt{44501} = 211.$$

$$CE = \sqrt{(288-100)^2 + (105-90)^2} = \sqrt{188^2 + 15^2} = \sqrt{35344 + 225} = \sqrt{35569} = 189.$$

$$DE = \sqrt{(288-199)^2 + (105-70)^2} = \sqrt{89^2 + 35^2} = \sqrt{7921 + 1225} = \sqrt{9146} = 96.$$

$$EB = \sqrt{(389-288)^2 + 105^2} = \sqrt{101^2 + 105^2} = \sqrt{10201 + 11025} = \sqrt{21226} = 146.$$

(*b*) டயாக்கனல் லயனுக்கு எதிர் பக்கங்களில் இரண்டு கற்களுக்கு ஆப்செட்டு எடுத்திருந்தால் ஷெ ஆப்செட்டுகளை கூட்டிய தொகையின் வர்க்கத்தையும் ஷெ ஆப்செட்டுகளின் மத்தியிலுள்ள செயின் லயன் அளவின் வர்க்கத்தையும் கூட்டிய தொகையின்மூலம் ஷெ கற்களுக்கு உண்டான தூரம்.

Fig. **54**.



உதாரணம்—

$$AB=\sqrt{(125+70)^2+100^2}=\sqrt{195^2+100^2}$$
$$=\sqrt{38025+10000}=\sqrt{48025}=219.$$

$$BC=\sqrt{(150-100)^2+(70+45)^2}=\sqrt{50^2+115^2}$$
$$=\sqrt{2500+13225}=\sqrt{15725}=126.$$

$$CD=\sqrt{(250-150)^2+(35+45)^2}=\sqrt{100^2+80^2}$$
$$=\sqrt{10000+6400}=\sqrt{16400}=128.$$

$$DE=\sqrt{(300-250)^2+(110+35)^2}=\sqrt{50^2+145^2}$$
$$=\sqrt{2500+21025}=\sqrt{23525}=153.$$

$$AD=\sqrt{250^2+(125+35)^2}=\sqrt{250^2+160^2}$$
$$=\sqrt{62500+25600}=\sqrt{88100}=297.$$

$$BD=\sqrt{(250-100)^2+(70-35)^2}=\sqrt{150^2+35^2}$$
$$=\sqrt{22500+1225}=\sqrt{23725}=154.$$

$$AE=\sqrt{300^2+(125-110)^2}=\sqrt{300^2+15^2}$$
$$=\sqrt{90000+225}=\sqrt{90225}=301.$$

(c) இம்மாதிரியே Fig. 55 - ல் கண்டபடி இரு பக்கங்களிலும் எவ்வளவு ஆப்செட்டுகள் எடுக்கப்பட்டிருந்தாலும் வேண்டிய அளவிடாத பக்கங்களின் அளவுகளை கண்டுபிடிக்கலாம்.

உதாரணம்—

Fig. **55.**



$$AC = \sqrt{80^2 + 80^2} = \sqrt{6400 + 6400} = \sqrt{12800} = 113.$$

$$AD = \sqrt{100^2 + 50^2} = \sqrt{10000 + 2500} = \sqrt{12500} = 112.$$

$$CE = \sqrt{(170-80)^2 + (80-60)^2} = \sqrt{90^2 + 20^2}$$
$$= \sqrt{8100 + 400} = \sqrt{8500} = 92.$$

$$DF = \sqrt{(200-100)^2 + (90-50)^2} = \sqrt{100^2 + 40^2}$$
$$= \sqrt{10000 + 1600} = \sqrt{11600} = 108.$$

$$EG = \sqrt{(260-170)^2 + (100-60)^2} = \sqrt{90^2 + 40^2}$$
$$= \sqrt{8100 + 1600} = \sqrt{9700} = 99.$$

$$FH=\sqrt{(300-200)^2+(90-70)^2}=\sqrt{100^2+20^2}$$
$$=\sqrt{10000+400}=\sqrt{10400}=102.$$

$$GI=\sqrt{(370-260)^2+(100-90)^2}=\sqrt{110^2+10^2}$$
$$=\sqrt{12100+100}=\sqrt{12200}=111.$$

$$HJ=\sqrt{(400-300)^2+(110-70)^2}=\sqrt{100^2+40^2}$$
$$=\sqrt{10000+1600}=\sqrt{11600}=108.$$

$$IK=\sqrt{(460-370)^2+(130-90)^2}=\sqrt{90^2+40^2}$$
$$=\sqrt{8100+1600}=\sqrt{9700}=99.$$

$$JL=\sqrt{(500-400)^2+(150-110)^2}=\sqrt{100^2+40^2}$$
$$=\sqrt{10000+1600}=\sqrt{11600}=108.$$

$$LB=\sqrt{(600-500)^2+150^2}=\sqrt{100^2+150^2}$$
$$=\sqrt{10000+22500}=\sqrt{32500}=180.$$

$$KB=\sqrt{(600-460)^2+130^2}=\sqrt{140^2+130^2}$$
$$=\sqrt{19600+16900}=\sqrt{36500}=191.$$

9. To trace on the ground the position of an obstructed line or one parallel to it when the extremities are not visible from one another or from any intermediate points—

ஒரு ஜண்டாவிலிருந்து மற்றொரு ஜண்டாவும் நடுவில் எந்த இடத்திலிருந்தும் இரண்டு ஜண்டாக்களும் தெரியாமல் தடைபட்டிருந்தால் ஷெ ஜண்டாக்களின் மத்திய செயின் லயன் போகும் இடத்தை யாவது அல்லது அதற்கு சமசரிதூரத்தில் போகும் வேறு ஒரு லயனின் இடத்தையாவது கண்டு பிடிக்க—

குறிப்பு:—இந்த உபாயங்கள் மேல்சொல்லியபடி தடைப்பட்ட புல் எல்லை லயனில் சேரும் சப்டிவிஷன் குறிகள் நிஷ்கருஷை செய்யவும், அப்படிப்பட்ட எல்லைகளின் அத்தில் ஏற்படும் தகரார்களை தீர்க்கவும், அப்படிப்பட்ட லயன்களின்பேரில் ஆப்செட்டு ஏற்படுத்தி காணாமலிருக்கும் கற்களை நடவேண்டியதற்கும், ஆப்செட்டை நிஷ்கருஷை செய்யவும் உபயோகமானவைகள்.

(*a*) By forming right-angled triangles with proportionate offsets—

நேர்க்கோண முக்கோணம் ஏற்படுத்தி அதின் ஒரு பக்கத்தின்பேரில் தாமாஷா அளவுப்படி ஆப்செட்டு எடுத்து லயன் கண்டுபிடிப்பது—

Fig. **56.**



A யிலிருந்தும் B யிலிருந்தும் நேராக அளக்கக்கூடிய தாயும் ACB என்னும் நேர்க்கோண முண்டாகக்கூடிய தாயுமுள்ள C என்னும் ஸ்தானத்தை யேற்படுத்தி AC, BC யை அளக்கவேண்டும்.

AC லயனில் D, E, F, G என்னும் சௌகரியமான குறிகளை ஏற்படுத்திக்கொண்டு ஷெ குறிகளினின்றும் அடியில் கண்ட அளவுகளுள்ள DH, EK, FL, GM என்னும் ஆப்செட்டுகளை எடுத்து H, K, L, M குறிகள் நிஷ்கருஷை செய்தால் இந்த குறிகள் AB லயனிலிருக்கும்.

உதாரணம்—

Fig. 56-ல் கண்டபிரகாரம் AC, CB லயன்கள் முறையே 446, 66 லிங்க்ஸ்களாகவும் AD, AE, AF, AG லயன்கள் முறையே 100, 150, 300, 400 லிங்க்ஸ்களாகவு மிருக்கிறதாக வைத்துக்கொள்வோம். DH, EK, FL, GM அளவுகள் அடியில் கண்டபடியிருக்கவேண்டும்.

$$DH = \frac{BC}{AC} \times AD = \frac{66}{446} \times 100 = 14\frac{356}{446}$$

$$EK = \frac{BC}{AC} \times AE = \frac{66}{446} \times 150 = 22\frac{88}{446}$$

$$FL = \frac{BC}{AC} \times AF = \frac{66}{446} \times 300 = 44\frac{176}{446}$$

$$GM = \frac{BC}{AC} \times AG = \frac{66}{446} \times 400 = 59\frac{86}{446}$$

ஷெ அளவுகளை வைத்து ஆப்செட்டுகளை அளந்து H, K, L, M என்னும் குறிகளை ஏற்படுத்தினல் அவைகள் ஒரே லயினிலிருக்கும். அந்தலயன்தான் AB லயன்.

ஒரே லயனில்லாவிட்டால் நாம் அளந்த அளவுகள் தப்பென்று அறியலாம்.

(*b*) By forming a parallelogram with alternate angles right angles—

ஒரு லயனின் இருபக்கங்களில் நேர்க்கோணமாக்கி சமசரிதூரமுள்ள லயன் ஏற்படுத்துவது—

Fig. 57.



AB தடைப்பட்ட லயன். BC, CA நேர்க்கோணமாகும்படியான C என்னும் ஸ்தானத்தை ஏற்படுத்தி CA யை அளந்து C யில் ஜண்டாவை போட்டுவிட்டு B யினிடம்போய் கிராஸ்ஸ்டாப்பை நிறுத்தி ஒருவரை வழியாக C யை பார்த்து மற்றொரு வரைக்கு நேராக ஒரு மனுஷனை நிறுத்தி AC க்கு சரியாயிருக்கும்படி BD யை அளக்கவேண்டும்.

பின்பு DC லயனில் B,A குறிகளுக்கு BE, AP என்னும் ஆப்செட்டு எடுக்கவேண்டியது. அவை ஒன்றுக்கொன்று சரியாய் இருக்கும். தவிர PE லயன் AB லயனுக்கு சரியாயும் சமதூரமுள்ளதாயு மிருக்கும்.

பின்பு EP லயனில் சௌகரியமான F, G, H, K என்னும் குறிகள் ஏற்படுத்திக்கொண்டு அவைகளி

னின்றும் EB, AP லயன்களுக்கு சரியாயிருக்கும்படி FL, GM, HN, KO என்னும் ஆப்செட்டுகளை அளந்து L, M, N, O குறிகள் ஏற்படுத்த வேண்டியது. இவைகள் AB லயனிலிருக்கும்.

(c) By forming similar triangles—

பக்கங்கள் சமமாயிராமல் கோணங்கள்மட்டும் சம மாய் உள்ள முக்கோணங்களை ஏற்படுத்தி லயன் ஏற் படுத்துவது—

குறிப்பு:—இதற்கு முன்சொன்னவழிகள் தடைப் பட்ட லயனின் இரண்டு பக்கமுமுள்ள ஜண்டாக்கள் கிராஸ்ஸ்டாப்பின் இருவரையிலும் தெரிந்து நேர்க்கோண மாகக்கூடிய கேசுகளில் மாத்திரம் உபயோகப்படும். ஜண் டாக்கள் தெரிந்தாலும் நேர்க்கோணம் செய்யமுடியாத கேசுகளில் அடியில்கண்ட வழிகள் உபயோகப்படும்—

(1) With the aid of cross-staff—

கிராஸ்ஸ்டாப்பின் உதவியினுடன்—

Fig. **58.**



AB லயன் தடைப்பட்டது. A, B இரண்டு ஜண்டாக்களும் தெரியக்கூடியதாயும் அளப்பதற்கு யாதொரு தடையுமில்லாமல் இருக்கப்பட்ட C என்னும் ஒரு இடத்தினின்று A,B குறிகளுக்கு அளக்கவேண்டியது. அப்படி அளந்ததில் CA 433-ம், CB 465-ம் ஏற்பட்டதாக வைத்துக்கொள்வோம். பின்பு அளந்த CA, CB யின் அளவுகளில் பாதிதூரமாகிய $216\frac{1}{2}$, $232\frac{1}{2}$ அளவுகளை முறையே CA, CB லயன்களில் அளந்து D,E குறிகளை ஏற்படுத்தவேண்டியது.

பின்பு DE லயனை அதை இருபுறத்திலும் நீட்டி அதின்பேரில் A, B, C குறிகளுக்கு FA, GB, CH ஆப்செட்டுகள் எடுக்கவேண்டியது. அது ஒவ்வொன்றும் 126 ஆகிறது. அவைகள் ஒன்றுக்கொன்றுக்கு சரியாய் இருக்கும். தவிர FG லயனானது AB லயனுக்கு சரியாயும் சமதூரமுள்ளதாயு மிருக்கும்.

பின்பு FG லயனில் சௌகரியமான K, L, M, N என்னும் குறிகள் ஏற்படுத்தி அவைகளினின்றும் AF க்கு சரியாயிருக்கும்படி KO, LP, MQ, NR ஆப்செட்டுகளை அளந்து O, P, Q, R குறிகளை ஏற்படுத்தவேண்டியது. அவைகள் AB லயனிலிருக்கும்.

(2) Without the aid of cross-staff—

கிராஸ்ஸ்டாப்பின் உதவியில்லாமல்—

Fig. 59.



AB லயன் தடைப்பட்டது. மேலே (1) வழியில் சொல்லியபடி C, D, E குறிகள் ஏற்படுத்தவேண்டியது. DE லயன் AB லயனுக்கு சமதூரமாயும் பாதி அளவுள்ளதாயுமிருக்கும். DE லயனில் சௌகரியமான F, G, H குறிகள் ஏற்படுத்தவேண்டியது. C யிலிருந்து F க்கு அளந்து அதே லயனில் அதே அளவை மறுபடி அளந்து K என்னும் குறியைக் கண்டு பிடிக்கவேண்டியது. CF $57\frac{1}{2}$, ஆனால் CFK லயன் 115 ஆக வைத்து K குறியை ஏற்படுத்தவும். அதே மாதிரியாய் CG, CH லயன்களை அளந்து அதே லயன்களில் மறுபடி அதே அளவுகளை வைத்து அளந்து L, M குறிகளை ஏற்படுத்த வேண்டியது. ஷை குறிகளாகிய K, L, M மூன்றும் AB லயனில் இருக்கும். இவைகளின் மத்திய அளவுகளை அடியில் கண்டபடி தெரிந்துகொள்ளலாம்—

AM = 2 DH	LK = 2 GF
AL = 2 DG	KB = 2 FE
AK = 2 DF	LB = 2 GE
ML = 2 HG	AB = 2 DE
MK = 2 HF	

குறிப்பு:-மேற்சொல்லிய மூன்றுகேசுகளும் தடைப் பட்ட லயினின் இரண்டு பக்க ஜண்டாக்களும் ஒரு குறி

யிலிருந்து தெரியக்கூடிய கேசுகளில் மாத்திரம் உபயோகப் படும். அப்படிதெரியத்தக்க குறி அகப்படாதகேசில் பின் வரும் வழியை உபயோகிக்கவும்.

(*d*) By forming a Parallelogram by offsetting the extreme points on the same side of an arbitrary line and equalizing the offsets—

ஏதேனும் ஒரு லயனின்பேரில் தடைப்பட்ட லயனின் இருபக்கமுமுள்ள ஜண்டாக்களுக்கு ஆப்செட்டு எடுத்து ஷை ஆப்செட்டுகளை ஒன்றுக்கொன்று சமமாகும்படி செய்து சமசரிதூரமுள்ள ஒரு நாற்கோணம் ஏற்படுத்தி லயன் கண்டுபிடிப்பது—

Fig. **60 A.**



Fig. **60 B.**



Fig. **60 C.**



AB லயன் தடைப்பட்டது. CD என்னும் ஏதேனும் ஒரு லயனில் A, B குறிகளுக்கு EA, FB என்னும் ஆப்செட்டுகள் எடுத்து அவைகளை அளக்கவேண்டியது. அப்படி அளந்ததில் BF க் காட்டிலும் AE நீளமாயிருப்பதாக வைத்துக்கொள்வோம். பிறகு அந்த இரண்டு ஆப்செட்டுகளையும் சமமாகச்செய்துக்கொள்ளவேண்டியது. அப்படி செய்துக்கொள்ள சௌகரியப்படி Fig. 60 A-ல் கண்டபிரகாரம் A யிலிருந்து AE லயனில் BF க்குள்ள அளவு அளந்து G குறியை ஏற்படுத்தவாவது; அல்லது, Fig. 60 B-ல் கண்டபிரகாரம் BF லயனில் AE க்கு சரியாயிருக்கும்படி அளந்து H குறியை ஏற்படுத்தவாவது, அல்லது Fig. 60 C-ல் கண்டபிரகாரம் AE லயனில் கொஞ்சதூரம் அளந்து G குறியை ஏற்படுத்திக் கொண்டு BF லயனில் AG அளவுக்கு சரியாயிருக்கும்படி அளந்து H குறியை ஏற்படுத்தவாவது செய்யலாம். அப்படி செய்துக்கொண்டபிறகு சமமாயிருக்கும் ஆப்செட்டுகளில் ஏற்படுத்திய குறிகளை சேர்க்கும் லயனின் (அதாவது Fig. 60 A-ல் GF லயன், Fig. 60 B-ல் EH லயன், Fig. 60 C-ல் GH லயன்) பேரில் A, B குறிகளுக்கு ஆப்செட்டுகள் எடுக்க வேண்டியது.- இந்த ஆப்செட்டுகள் ஒன்றுக்கொன்று சமமாயிருக்கும். பிறகு

மேற்சொன்ன லயன் பேரிலேயே சௌகரியமான M, N O, P குறிகளிலிருந்து ஆப்செட்டுகள் எடுத்து அவைகளை A, B யிலிருந்து எடுத்த ஆப்செட்டுகளுக்கு சமமாக்கி Q,R,S,T குறிகளை ஏற்படுத்தவேண்டியது. ஷை குறிகள் AB லயனிலிருக்கும். AB லயன் அளவு LK லயன் அளவுக்கு சரியாயிருக்கும்.

CHAPTER V.

அத்தியாயம் 5.

MEASUREMENT BY CHAIN OF BLOCKS NOT CHAINABLE WITHIN.

ஏதேனும் ஒரு புலத்தில் உள்ளுக்குள் "டயாக்கினல்" அளந்து ஆப்செட்டு எடுக்கக்கூடாவிட்டால் அதை அளக்கும் விதம்—

1. By offsetting all stones on a single straight line conveniently chosen for the purpose—

Fig. 61.



CDEFG என்னும் புலத்திற்குள் "டயாக்கினல்" அளக்க சாத்தியமில்லை. AB என்னும் ஏதேனும் ஒரு சவுகரியமான லயனை அளந்து அதில் எல்லா கற்களுக்கும் ஆப்செட்டுகள் அளந்தோ அல்லது மேலே 2-வது அத்தியாயத்தில் சொல்லிய வழிகளினால் அவசியமான அளவுகளைக் கண்டு பிடித்தோ பிளாட்டு செய்யலாம்.

2. By offsetting all stones on any two convenient straight lines taken at right angles to each other—

Fig. **62.**



EFGHKLMNOP என்னும் நத்தமும் குளமும் சேர்ந்த புலத்தில் AB, CD என்னும் சவுகரியமான லயன்களில் நேர்க்கோணம் உண்டாகும்படி செய்து மேற்படி இரண்டு லயன்களின் பேரிலும் ஆப்செட்டுகள் எடுக்கலாம்.

3. By offsetting on a number of convenient straight lines taken at right angles to each other successively—

Fig. 63 A.



Fig. 63 B.



அடிக்கடி வளைந்தும் பக்கங்கள் மறைவுபடும்
Figs. 63 A and 63 B க்களில் காட்டிய வாரி அல்லது வழிபோன்ற புலங்களை பிளாட்டு செய்வதற்கு ஒன்றுக்கொன்று நேர்க்கோணமாயுள்ள சில நேர்க்கோடுகளை அளந்து ஆப்செட்டு எடுக்கலாம்.

4. By offsetting all stones on the three sides of a triangle conveniently formed for the purpose—

Fig. **64**.



AG என்ற ஒரு புலத்தை அளந்து பிளாட்டு செய்வதற்கு XYZ யைப் போன்ற ஏதேனும் ஒரு முக்கோணத்தை ஏற்படுத்தி மேற்படி முக்கோணத்தின் மூன்று பக்கங்களிலிருந்தும் பிரஸ்தாப புலத்தின் எல்லா கற்களுக்கும் ஆப்செட்டுகள் எடுக்கலாம்.

5. By offsetting all stones on the sides of a rectangle conveniently formed for the purpose—

Fig. **65**.



ABCD யைப் போன்ற ஏதேனும் ஒரு நாற்க்கோணம் (நாலு மூலையும் நேர்க்கோணமாகும்படி) பிரஸ்தாப புலத்திற்கு வெளியில் அளந்து அதின் நாலு பக்கங்களிலிருந்தும் எல்லா கற்களுக்கும் 65-வது பிகரில் காட்டியபடி ஆப்செட்டுகள் எடுக்கலாம்.

6. By offsetting on the sides of a quadrilateral conveniently formed for the purpose, having only one of its angles a right angle—

Fig. **66.**



A மாத்திரம் நேர்க்கோணமாயுடைய ABCD என்னும் ஒரு நாற்க்கோணத்தை ஏற்படுத்தி அதின் நாலு பக்கங்களிலிருந்தும் எல்லா கற்களுக்கும் ஆப்செட்டுகள் எடுக்கலாம்.

7. By offsetting all stones on the sides of a rectilineal figure conveniently formed for the purpose, having all its angles but three successive ones as right angles—

Fig. **67**.



L, K, H மூன்றுகோணம் மாத்திரம் நேர்க்கோணமாயில்லாமல் மற்ற கோணங்களெல்லாம் நேர்க்கோணமாயிருக்கும்படி ஏற்படுத்தப்பட்ட ஏதேனும் A B C D E F G H K L போன்ற நாலுக்கு மேற்பட்ட பக்கமுள்ள ஒரு உருவத்தை ஏற்படுத்தி அதின் பக்கங்களிலிருந்து எல்லா கற்களுக்கும் ஆப்செட்டுகள் எடுத்துப் பிளாட்டு செய்யலாம்.

8. To survey an obstructed field whose boundary stones are not accessible to the chain, though only visible from a distance—

Fig. **68**.



நாகதாளி முதலிய புதர்களினால் ஒரு புலத்தின் சுற்றளவாவது “டயாக்னலாவது” அளக்கக்கூடா மலும் கற்கள் கண்ணுக்குத் தெரிந்த போதிலும் கிட்ட நெருங்கக் கூடாமலுமிருக்கும் கேசில் புலத்தை சர்வே செய்யும் விதம்.

புலத்திற்கு வெளியில் சவுகரியமானபடி நாலு பக்கத் திலும் அளக்க சாத்தியமாயிருக்கும் இடத்தில் A B C D என்ற நேர்க்கோண நாற்கோணம் (rectangle) ஏற் படுத்தவேண்டியது. பின்னிட்டு ஸ்கெட்சில் காட்டியபடி ஒவ்வொரு கல்லுக்கும் மேற்படி நாற்கோணத்தின் ஏதே னும் ஒரு நேர்க்கோணத்தின் இரண்டு நேர்க்கோட்டின் பேரிலும் ஆப்செட்டுகள் எடுக்கவேண்டியது. ஆப் செட்டுகளை அளக்க முடியாவிட்டாலும் பாதகமில்லை. செயின்லயன் அளவுகளைக் கொண்டு ஆப்செட்டு அளவு கள் கண்டுபிடிக்கலாம். இந்த இரண்டு ஆப்செட்டு களையும் கொண்டு வேண்டிய குறிகளை பிளாட்டு செய்ய லாம். டயாக்னல்களும் ஸ்கொயர் ரூட் (square root) வழியாய் கண்டு பிடித்துக்கொள்ளலாம்.

CHAPTER VI.

அத்தியாயம் 6.

1. To connect detached pieces of lands in an unsurveyed block by chain and cross-staff only—

சங்கிலி கிராஸ்ஸ்டாப்புகளினுல் அன்சர்வே பிளாக்கில் சாகுபடி துண்டுகளை பிளானில் சேர்க்கும் விதம்—

(*a*) முக்கோண வழி—

Fig. **69.**



Fig. 69-ல் கண்ட துண்டுகள் அன்சர்வே பிளாக்கு லயனுக்கு அருகாமையில் இருந்தால் 1-3 நெம்பர்கள் போல் ஆப்செட்டுகள் ஏதேனும் இரண்டு கற்களுக்கு குறையாமல் அன்சர்வே பிளாக்கின் ஏதேனும் வேறே இரண்டு கல்லுக்கு போகும் லயனில் எடுக்கவேண்டியது 2-ம் நெம்பர் போல் மத்தியிலிருந்தால் முன்னுல் பிளானில் நிஷ்கருஷையாயிருக்கும் ஏதேனும் இரண்டுக்குக் குறையாமல் கல்லுகளிலிருந்து இரண்டாவது துண்டினுடைய இரண்டு கற்களுக்கு முக்கோணங்களாகும்படி அளக்கவேண்டியது.

Fig. 70.



(*b*) அப்படி அளக்கமுடியாத கேசுகளில் ஒன்றுக் கொன்று நேர்க்கோணமாகும்படி அநேக நேர்க்கோடுகள் அளந்து அதினின்றும் சேர்க்கலாம்.

Fig. 70-ல் புலம் 1-ல் A, B இரண்டு குறிகளுக்கும், 2-ல் C, D க்கும், 3-ல் E, F க்கும், 4-ல் G, H க்கும் இம்மாதிரி ஆப்செட்டு எடுக்கப்பட்டிருக்கிறது. இதை அளந்த பிரகாரமே ஆப்செட்டுகள் ஒன்றின்பேரில் ஒன்றாய் பிளாட்டு செய்யலாம்.

ஆனால் அதைவிட அடியில்கண்டபடி செய்வது ரொம்ப சரியாயிருக்கும்.

AX, AY போன்ற இரண்டு நேர்க்கோடு A-ல் நேர்க்கோணமாகும்படி பிளாட்டு செய்துகொண்டு AX நேர்க்கோட்டிலிருந்து B யைப் பிளாட்டு செய்து AB லயன்பேரில் 1-வது நெம்பரை பிளாட்டு செய்யலாம்.

இந்த AX நேர்க்கோட்டில் C,D,E,F,G,H கற்களுக்கு செயின் லயன் ஆப்செட்டு அளவுகள் அடியில் குறித்தபடி கண்டுபிடிக்கலாம்—

கல். செயின் லயன்.

C $100-120+170+25+20=195$.

D $100-120+170+25+40=215$.

E $100-120+170+25-115-35-30=-5$.

F $100-120+170+25-115-35-85=-60$.

G $100-120+170+25-115-35-120-80-35$
$=-210$.

H $100-120+170+25-115-35-120-80-95$
$=-270$.

ஆப்செட்டு.

C $250+135-70+105=420$.

D $250+135-70+195=510$.

E $250+135-70+290+175-30+35=785$.

F $250+135-70+290+175-30+25=775$.

G $250+135+220+175-30+110-320-41=499$.

H $250+135+220+175-30+110-320-50=490$.

இதில் 5, 60, 210, 270 க்கு முன்னிருக்கும்—(கழித்தல்) குறியினால் AX லயனில் பின்புறம் செயின் லயன் ஒன்று கண்டுக்கொண்டு அதினின்று பிளாட்டு செய்யவேண்டியது. அதேமாதிரி ஒரு வேளை ஆப்செட்டில்—(கழித்தல்) குறி வந்தால் AX லயனுக்கு இடது பக்கத்தில் ஆப்செட்டை பிளாட்டு செய்யவேண்டியது. இப்படி CD, EF, GH லயன்கள் பிளாட்டு செய்த பின்பு அந்தந்த நெம்பர்கள் அதாவது முறையே 2, 3, 4 பிளாட்டு செய்யலாம்.

CHAPTER VII.

அத்தியாயம் 7.

PLOTTING.—பிளாட்டிங்கு.

EXPLANATION AND DEFINITION OF EYE SKETCHES AND PLOTTED MAPS.

1. நில சர்வே செய்வதில் ஒரு முக்கியமான காரியம் சர்வே செய்யும் புலம் அல்லது பூமியின் உருவத்தைப்போன்ற ஒரு உருவத்தை காகிதத்தில் ஏற்படுத்துவதாகும்.

அப்படி ஏற்படுத்தும் உருவத்தில் சாதாரணமாய் "ஐ ஸ்கெட்சு" "பிளாடட் பிளான்" என்று இரண்டு விதமுண்டு.

ஐ ஸ்கேட்சு என்பது பூமியின் உருவத்தைப் போன்ற உருவம் காகிதத்தில் கண்பார்வையைக் கொண்டோ அல்லது உத்தேசமான அளவுகளைக் கொண்டோ ஏற்படுத்தப்பட்ட நக்ஷா.

பிளாடட் பிளான் என்பது பூமியை மிகவும் சரியாயும் கணித சாஸ்திரப்படியாயும் அளந்து ஷெ விதிப்படி தயார் செய்யப்படும் நக்ஷா.

இம்மாதிரிதயார் செய்யப்படும் பிளாட்டான பிளான் தான் மாப்பு என்று சொல்லப்படும்.

EYE SKETCH AND PLOTTED MAP COMPARED.

2. பிளான் தயார் செய்யும்வழியை ஒருவன் தெரிந்துக்கொண்டால் கொஞ்சமும் தப்பாமல் அதை வெகு சுலபமாய் தயார் செய்யலாம். தவிர பலபரிமாணங்களில்

ஒரே-பூமியின் பிளான் தயார் செய்யப்பட்டாலும் அவை களுக்கெல்லாம் பூமியின் அளவு ஒரே அளவுள்ளதாய் கொஞ்சமும் வித்தியாசமின்றி இருக்கும்.

இம்மாதிரி தயார் செய்யப்பட்ட ஒரு பிளான் அல்லது பிளாடட் மாப்பானது ஒரு மனிதன் அல்லது ஒரு வஸ்துவை பொட்டகிராப் பிடித்தால் அந்த பொட்ட கிராப் எப்படி அந்த மனிதன் அல்லது வஸ்துவின் சரியான உருவத்தை ஒரே தாமாஷா உள்ள சிறிய பரிமாணத்தில் காட்டுமோ அப்படி அந்த நிலத்தின் உருவத்தை சிறிய பரிமாணத்தில் காண்பிக்கும்.

தவிர இப்படி தயார் செய்யப்பட்ட பிளான் பூமியைவிட நிஷ்கருஷையாய் இவ்வளவு மடங்கு சிறியது என்று அந்த பிளாட்டு செய்த பிளானிலேயே அறியலாம். அறிந்த பிறகு எதாகிலும் ஒரு லயன் வாஸ்தவத்தில் பூமியில் அளக்கப்படாமலிருந்தபோதிலும் அதின் நீளத்தை நாம் தயார் செய்திருக்கும் பிளானில் ஸ்கேல் வைத்து அறிந்துக் கொள்ளலாம். தவிர ஷை புலத்தின் எந்த பாகத்தின் விஸ்தீரணத்தையும் பூமியில் அளக்காமலே பிளானிலேயே சுலபத்தில் கண்டு பிடிக்கலாம். பிளான் தயார் செய்வதின் ஒரு முக்கியமான கருத்து சுலபத்தில் விஸ்தீரணம் கண்டு பிடிப்பது.

கை ஸ்கெட்சானது கணித சாஸ்திரப்படி தயார் செய்யப்படாமல் கண்பார்வை அல்லது உத்தேசமான அளவுகளைக்கொண்டு தயார் செய்யப்படுவதில் ஒருவன் கண்ணினல் ஒருமனிதனை அல்லது வஸ்துவைப்பார்த்து அவனை அல்லது அதைப்போன்ற ஒரு சித்திரம் கையினல் தயார் செய்வதை ஒத்திருக்கும். கை ஸ்கெட்ச

தயார் செய்கிறவனுடைய திறமையையும், பழக்கத்தை யும், சாதூரியத்தையும் பொருத்து சற்றேரக்குறைய பிளாடட் ஸ்கெட்சுக்கு சரியாய் தயார் செய்யப்பட்டிருந்த போதிலும் பிளாட்டான பிளானுக்குள்ள மேல் சொல்லிய குணங்கள் அமையாமலிருக்கும் தவிர அநேகர் ஒரே பூமியின் கை ஸ்கெட்சு தனித்தனி தயார் செய்தால் அவர்கள் எவ்வளவு சாமர்த்தியசாலிகளாயிருந்தாலும் அவர்களால் தயார் செய்யப்பட்ட கை ஸ்கெட்சுகள் ஒன்றுக்கொன்று சரியாயிராது.

DIRECTION AND SCALE OF PLAN.

3. ஒவ்வொரு கை ஸ்கெட்சு அல்லது பிளானிலும் தலைப்புறம் வடக்காயும் வலதுகைப்பக்கம் கிழக்காயும் அடிப்புறம் தெற்காயும் இடது கைப்பக்கம் மேற்காயும் தயார் செய்ய வேண்டியது. அதில் எழுதப்பட்ட சகல அளவு பெயர் எல்லாவற்றையும் நேருக்கு நேராய் எழுத வேண்டும். வடக்குக்குறி போட வேண்டும். ஸ்கேல் தாக்கல் செய்யவேண்டும். கூடுமானல் ஸ்கேல் ஒன்று சிறிய தாய்ப்போடவேண்டும். அநேகபிளான்களடங்கிய (Atlas) புஸ்தகமாயிருந்தால் அதில் எல்லா பிளான்களும் ஒரே பக்கமாயிருந்து எதாவது ஒன்று வேறே பக்கம் திருப்பிப் போடப்பட்டிருந்தால் அவசியம் அதில் வடக்குத்திக்கு நன்ருய் குறிக்கவேண்டும்.

ஒரு புலத்தின் பிளானை எந்த ஸ்கேலில் தயார்செய்ய வேண்டுமென்பது அதில் காட்டவேண்டிய உட்பிரிவுகளையும் அளவுகளையும் தாக்கல் செய்யவேண்டிய அம்சங்களையும் தெளிவாய்க்காட்ட போதுமான இட்முள்ள

தாளென்பதைப்பொருத்திருக்கிறது. அதிகமான அளவுகள் அல்லது சப்டிவிஷன்களை காட்டவேண்டியதாயிருந்தால் அதற்குத்தக்கபடி பெரிய ஸ்கேலில் பிளான் தயாரிக்க வேண்டும்.

HOW TO PREPARE A HAND SKETCH.

4. மேற்சொல்லிய கை ஸ்கெட்சானது பிளான் அல்லது பிளாட்ட் ஸ்கெட்சைவிட அதிக கஷ்டத்துடனும் பழக்கத்துடனும் தயாராக வேண்டியதாயும் அதிக பிரயோஜன படத்தக்கதல்லதாயும் சரியாயில்லாமல் உத்தேசமான அளவுள்ளதாயுமிருந்தாலும் பிளான் தயார் செய்ய தேவையான அளவுகளை பூமியில் அளந்துகுறிக்கும் நிமித்தியம் முன்னால் கை ஸ்கெட்சு தயார் செய்தால்தான் சவுகரிய மாயிருக்குமாகையால் கை ஸ்கெட்சு போட பழகவேண்டியதும் மிகவும் அவசியமான வேலை.

ஒருநிலம் அல்லது பூமியின் பிளாட்ட் நக்ஷா அதாவது பிளான் தயார்செய்ய வேண்டுமானால், அந்த நிலத்தைச்சுற்றி மூலைக்குமூலை குறிகள் ஏற்படுத்தவேண்டும். அப்படி ஏற்படுத்தும் குறிகளை அடுத்து அடுத்து ஒன்றோடொன்று நேர்க்கோடாய் சேர்த்தால் ஸ்கெட்சு ஏற்படவேண்டிய நிலத்தில் கொஞ்சமும் வெளிப்படாமலும் வேறேநிலம் உள்ளே சேராமலுமிருக்கும்படி இருக்க வேண்டும். அப்பேற்பட்ட குறிகளை ஏற்படுத்தினபின்பு அவைகளைக்காட்டி அந்த பூமியின் உருவத்தைப்போன்ற ஒரு கை ஸ்கெட்சு தயார்செய்யவேண்டும்.

இம்மாதிரி தயார் செய்யப்படவேண்டிய கை ஸ்கெட்சானது கூடியவரையில் பூமியின் உருவத்தை ஒத்திருக்க வேண்டும். அப்படிச்செய்ய அடியில்கண்ட அம்சங்களை முக்கியமாய் கவனிக்கவேண்டும்.

முதலில், பூமியில் ஆரம்பிக்கும் இடத்திற்கும் பூமிக்கும் இருக்கும் திசையை அனுசரித்து காகிதத்தில் எந்த இடத்தில் அதற்குரிய புள்ளியை எடுத்துக்கொண்டால் காகிதத்திற்குள்ளாகவே அந்த ஸ்கெட்சு நிறைந்து அடங்குமோ அதை யனுசரித்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

அந்த மாதிரி அந்த முதல் குறியின் நிலைமையை காகிதத்தில் தாக்கல் செய்தபின்பு இரண்டு புறமும் ஏற்படுத்திய இரண்டு குறிகளிலும் இரண்டு ஜண்டாக்களை நிறுத்தி இந்த இரண்டு கோடுகளால் பூமியிலிருக்கும் கோணம் காகிதத்தில் சரியாயிருக்கும்படி இரண்டு பக்கத்திலும் சிறியகோடுகள் இழுக்கவேணும். பின்னிட்டு முதல் குறியினின்று இரண்டாவது குறிக்கு நடக்கும் போதே எத்தனை தாண்டு (pace) நடக்கிறோமென்று மனதிலேயே எண்ணிக்கொண்டுபோய் அதை யனுசரித்து முன்னமேயே இழுக்கப்பட்ட கோட்டை நீட்டவேண்டும். இவ்விதமாகவே மற்ற கோணங்களையும் லயன்களின் நீளங்களையும் நிதானித்து ஸ்கெட்சு தயார்செய்து கொண்டுபோனால் புலத்தின் உருவம் காகிதத்தில் சற்றேறக்குறைய சரியாய் ஏற்படும். இது சர்வே வேலையில் வெகுயுக்தியும் பழக்கமும் வேண்டியதாகையால் அதை பழகுகிறவரையில் இம்மாதிரி அடிக்கடி போடவேண்டும். கை ஸ்கேட்சானாலும் கையால் கோடுகள் இழுக்காமல் ஷேப்ரூலரைக் கொண்டே கோடுகள் இழுக்கவேண்டும்.

பின்னிட்டு அந்த நிலத்தை எந்த மாதிரி அளக்க சவுகரியமோ, அவசியமோ, அவைகளையும், எந்த அளவு கருவிகள் இருக்கின்றனவோ, உபயோகப்படக்கூடுமோ அவைகளையும், எம்மாதிரி பிளான் தயார்செய்ய வேண்டுமோ,

அதையும் அது எந்தப்பரிமாணமாயும், எவ்வளவு நுட்பமாயுமிருக்க வேண்டுமென்பதையும் அனுசரித்து பூமியில் சர்வே செய்யவேண்டும். அப்படி சர்வேசெய்த ரிகார்டுகளினின்று பிளான் தயார்செய்ய வேண்டும்.

ARTICLES REQUIRED FOR PLOTTING.
பிளாட்செய்ய தேவையான கருவிகள்.

5. அம்மாதிரி பிளான் தயார் செய்வதற்கு சாதாரணமாய்வேண்டிய சாமான்களும் கருவிகளும்—

(1) நல்ல காகிதம்.
(2) கூர்மையாயும் கடினமாயும் உள்ள பென்஼ஸல்.
(3) ரப்பர்.
(4) ஸ்கேல்.
(5) பிட்டு.
(6) கம்பாஸ்.
(7) பிளாட்டு பலகை.
(8) ஷேப் ரூலர்.
(9) நல்ல இங்கி.
(10) சவுகரியமான பேனு அல்லது டிராயிங்பென்.

6. இவைகளில் 1,2,3,9,10 சாமான்கள் நல்லவையா யிராவிட்டால் எவ்வளவு ஜாக்கிரதையாய் பிளான் தயார்செய்தாலும் அது பார்ப்பதற்கு அழகா யிராது.

SCALE.

7. ஸ்கேல்—பூமியிலிருக்கும் ஒரு தூரத்தை எவ்வளவு மடங்கில் சிறிதாய் பிளானில் காட்டியிருக்கிறதோ அதைக் காட்டுவது ஸ்கேல் என்று சொல்லப்படும்.

அதாவது ஒரு அங்குலம் ஒரு சங்கிலி ஸ்கேல் என்ருல் பூமியில் ஒரு சங்கிலி தூரத்தை காகிதத்தில் ஒரு அங்குலமாக காட்டப்படுகிறது என்று தாத்பரியம். அதே மாதிரி ஒரு அங்குலம் இரண்டு சங்கிலி, ஒரு அங்குலம் ஐந்து சங்கிலி, ஒரு அங்குலம் பத்து சங்கிலி, என்றவைகளுக்கும் தாத்பரியம் கொள்ளுக. சில சமயத்தில் இவைகளையே 80, 40, 16, 8 அங்குல ஸ்கேல் என்று கூறுவதுமுண்டு. அதின் தாத்பரியம் என்னவென்ருல் பூமியில் ஒரு மைல் (அதாவது 80 சங்கிலி) தூரமானது காகிதத்தில் முறையே 80, 40, 16, 8 அங்குலத்தில் காட்டப்பட்டிருக்கின்றது என்று தாத்பரியம். இம்மாதிரி சொல்லுவதுடனும் பிளான் எத்தனை மடங்கு பூமியிலும் சிறியது என்று அறியும்படி பின்ன சங்கியையாயும் (Representative Fraction) காட்டுவதுண்டு.

REPRESENTATIVE FRACTION.

அதாவது ஒரு அங்குலம் ஒரு சங்கிலி என்பதை ஒரு சங்கிலிக்கு 792 அங்குலமாகையால் பூமியில் 792 அங்குலதூர மிருப்பதை பிளானில் ஒரு அங்குலமாக காட்டப்பட்டது என்பதை குறிக்க $\frac{1}{792}$ என்றும் குறிப்பதுண்டு. அதேமாதிரி 40, 16, 8 அங்குல ஸ்கேலையும் $\frac{1}{1584}$, $\frac{1}{3960}$, $\frac{1}{7920}$ என்று குறிப்பிடலாம்.

பூமியில் நேர்க்கோட்டை அளப்பதற்கு எப்படி சங்கிலி உபயோகப்படுகிறதோ அப்படி காகிதத்தில் நேர்க்கோட்டை அளந்து பிளான் தயார் செய்ய ஸ்கேல் உபயோகப்படும்.

DEFINITION OF SCALE (INSTRUMENT).

ஸ்கேல் என்பது மரத்தினலாவது காகிதத்தினலாவது செய்யப்பட்டு சரிபாகமாய் வகுக்கப்பட்டுள்ளது. சாதாரணமாய் வழங்கி வரும் ஸ்கேல்களில் அங்குலங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு அங்குலமும் பூமியில் எவ்வளவு சங்கிலி தூரத்தை காண்பிக்கிறது என்பதை குறிப்பிட, இரண்டு சமபாகங்களாகவோ, அல்லது ஐந்து சமபாகங்களாகவோ பிரிக்கப்பட்டிருக்கும் பாகங்களை வரிசைக்கிரமமாய் 1,2,3 என்று குறிப்பட்டிருக்கும். ஸ்கேலில் ஒரு சங்கிலி தூரத்தைக்காட்டும் அளவை மறுபடி 10 பாகங்களாக பிரிக்கப்பட்டிருக்கும். அப்படி பிரிக்கப்பட்ட ஒவ்வொரு பாகமும் 10 லிங்க்ஸ் தூரத்தைக் குறிப்பிடும். பிளாட்டு செய்யும்பொழுது 10 லிங்க்ஸ்க்கு குறைவான அளவுகளை காண்பிப்பதற்கு ஐந்து லிங்க்ஸ்க்கு உள்பட்டதை தள்ளியும் ஐந்து லிங்க்ஸ்க்கு மேற்பட்டு பத்து லிங்க்ஸ்க்குள்பட்டதை பத்து லிங்க்ஸ் ஆகவும் வைத்து பிளாட்டு செய்யவேண்டும்.

BIT.

8. பிட் என்பது ஸ்கேல் மாதிரியே செய்யப்பட்டுள்ளது. ஆனல் ஸ்கேலைப்போல பெரியதாயிராமல் சிறியதாய் சாதாரணமாய் இரண்டு அங்குல நீளமுள்ளதாய் செய்யப்பட்டிருக்கும். இது பூமியில் (Cross - staff) கிராஸ்ஸ்டாப்பையும் (Offset pole) ஆப்செட் கோலையும் உபயோகித்து ஆப்செட்டு எடுக்கிறதைப்போல, காகிதத்தில் ஆப்செட் எடுக்க உபயோகப்படுவதால் இதை ஆப்செட் ஸ்கேல் என்றும் சொல்லுவதுமுண்டு. இதை ஸ்கேலோடு சேர்த்து உபயோகிக்கும் பொழுது காகிதத்தில் நேர்க்கோணங்கள் உண்டாகும்.

COMPASSES.

9. கம்பாஸானது ஸ்கேலில் வேண்டிய அளவை நிஷ்கருஷையாய் எடுக்க கூர்மையான முனைகளுடைய தாயும் மடக்கக் கூடியதாயும் இருக்கிறது. இதினல் ஒரு நேர்க்கோட்டின் பேரில் முக்கோணத்தை பிளாட் செய்யலாம்.

DRAWING OR PLOTTING BOARD.

10. பிளாடிங்கு பலகையானது சாதாரணமாய் பிளாட்டு செய்யவேண்டிய காகிதத்தைத் தரையில் விரித்தால் அழுக்காவதுமன்றி தரையும் சமமாயில்லாமல் பிளான் தப்பிப்போகுமாகையால் அப்படி ஆகாமலிருக்கும் பொருட்டு உபயோகப்படுத்தும் சமமானபலகை.

SHAPE RULER.

11. ஷேப் ரூலரானது ஸ்கேலினல் எடுத்து குறிக்கப்பட்ட குறிகளைச் சேர்த்து நேர்க்கோடு இழுக்க உபயோகப்படும். இது ஸ்கேலைப்போலவே மரத்தினல் செய்யப்பட்டு தட்டையாயிருக்கும். சிலர் பென்ஸலிலும் இங்கியிலும் நேர்க்கோடுகள் இழுப்பதற்கு ஸ்கேலையே உபயோகப்படுத்துகிறார்கள். அப்படிச்செய்வதில் ஸ்கேல் சீக்கிரம் கெட்டுப்போகும்.

MEASUREMENT OF CURVED LINES.

12. எவ்விதத்தில் எந்தக் கருவிகளால் நிலசர்வே செய்தாலும் பூமியில் நேர்கோடுகளாகவே அளந்து பிளானிலும் நேர்க்கோடுகளாகவே பிளாட் செய்யவேண்டும். வட்டம் அல்லது வளைவாயுள்ள உருவங்களை அவ்விதமாகவே அளந்து பிளாட்செய்வது அசாத்தியம். அதை நேர்க்கோடுகளாகப்பிரித்து அளந்துதான் பிளாட் செய்ய வேண்டும்.

DIFFERENT METHODS OF SURVEY.

13. ஒரு புலத்திற்கு பிளான் தயார்செய்ய வேண்டியதானல் அதை அளந்த ரிகார்டுகளில் பிளான் தயார் செய்யத் தேவையான அளவுகள் இருந்தாலொழிய பிளான் தயார் செய்ய முடியாது. சரியான பிளான் தயார் செய்வதற்காக பூமியில் அளக்க வேண்டிய விதங்கள் முக்கியமாய் மூன்றுண்டு.

அவைகளாவன—

(1) முக்கோணவழி.

(2) டயாக்கனல் ஆப்செட் வழி.

(3) கோண (Angular) அளவுள்ள வழி.

TRIANGULATION.

14. முக்கோண வழியாவது—நாம் அளக்க வேண்டிய புலத்தை கூடிய வரையில் எத்தனை பெரிய முக்கோணங்களாகப் பிரிக்கமுடியுமோ அப்படி உடைத்து அந்த முக்கோணங்களின் ஒவ்வொரு பக்கங்களின் அளவுகளையும் அளக்கவேண்டும். இம்மாதிரி அளப்பதில் பூமியில் சங்கிலி ஒன்றே உபயோகப்படுகிறது. அப்படி அளந்த அளவைக்கொண்டு ஸ்கேல், கம்பாஸ் இந்த கருவிகளினல் காகிதத்தில் பிளாட் செய்யக்கூடும். முதலில் ஒரு முக்கோணத்தை பிளாட் செய்துக்கொண்டு பிறகு மற்ற முக்கோணங்களை ஒன்றின்பேரில் ஒன்ருய்ப் பிளாட் செய்யவேண்டும். இப்படி முக்கோணங்களாய்ப் பிரிப்பதில் முக்கோணத்தின் மூன்று பக்கங்களும் ஒன்றுக்கொன்று கூடிய வரையில் சமமாய் இருக்கக்கூடியதாய் இருக்கவேண்டும். அப்படி சமமாயிருந்தால் பிளாட் செய்யும்பொழுது கொஞ்சங்கூட வித்தியாசப்படாமல் சரியாய் பிளாட்டு ஆகும்.

DIAGONAL AND OFFSET METHOD.

15. டயாக்கனல் ஆப்சேட் வழியாவது—ஒரு புலத்தில் ஒரு லயனையளந்து அந்த லயனின் பேரில் பக்கத்திலிருக்கும் குறிகளுக்கு ஆப்செட் எடுத்திருப்பதைக் கொண்டு பிளாட்செய்வது. இது ஸ்கேல் பிட்டினால் பிளாட்செய்யலாம்.

ANGULAR MEASUREMENT.

16. கோண அளவுகளின் வழியாவது—நிலத்தில் கோணங்களை அளக்கும் கருவிகளைக்கொண்டு சர்வே செய்து அதை கோணம் பிளாட் செய்யும் (Protractor) கருவியைக்கொண்டு பிளாட்செய்வது. இதை பெரும்பாலும் அனுஷ்டிக்கிறதில்லை.

HOW TO FIX A POINT OR POSITION.

17. சங்கிலி கிராஸ்ஸ்டாப்பு இவைகளைக் கொண்டு சர்வே செய்த புலத்தின் பிளான் தயார்செய்வதில், முக்கியமாய் கவனிக்க வேண்டிய தென்னவென்றால்—ஒரு பிளானில் ஒரு புதிய குறியின் இடத்தை பிளாட் செய்ய வேண்டுமானால்—

(1) அந்தகுறிக்கு பிளானில் எற்கனவே ஏற்பட்ட எதேனும் இரண்டு குறிகளினின்று அளவுகள் வேண்டும். கம்பாஸின் உதவியால் அந்த குறியை பிளாட் செய்யலாம்.

(2) பிளாட்டாயிருக்கும் எதேனுமிரண்டு குறிகளைச் சேர்க்கும் நேர்க்கோட்டில் ஆப்செட்டு எடுத்திருக்கவேண்டும். அவைகளால் ஸ்கேல்பிட்டைக் கொண்டு அந்தக்குறியை பிளாட் செய்யலாம். இந்த இரண்டு அம்சங்களில் ஒன்றுமில்லா விட்டால் அந்தக்குறியின் இடத்தை பிளாட் செய்யமுடியாது.

TWO INDEPENDENT CHECKS.

18. சர்வே செய்வதிலும் பிளான் தயார்செய்வதிலும் முக்கியமாய் சர்வே செய்வதில் ஒவ்வொரு லயன் அளவையும் ஒன்றுக்கொன்று சம்மந்த மில்லாத இரண்டு விதங்களில் கண்டு பிடித்து ஒன்றுக்கொன்று சரியாய் தகவல் வந்தாலொழிய செய்தவேலை சரியென்றுசொல்ல முடியாது. ஏனென்றால் பூமியிலும் காகிதத்திலும் வேலை செய்யும்போது எவ்வளவு ஜாக்கிரதையாய் வேலை செய்தாலும் தப்பு உண்டாவதற்கு அநேக காரணங்களுண்டு. ஆகையால் மேற்சொல்லிய இரண்டு விதத்திலும் ஒவ்வொரு குறியின் அளவையும் பூமியில் அளந்து பிளான் தயார் செய்யும்போது ஒருவழியில் பிளாட் செய்து மற்றொருவழியில் தனிக்கை செய்வது மிகவும் அவசியம்.

TIE LINES.

19. இம்மாதிரி இரண்டு வழியிலும் அளப்பதில் சில சமயம் முக்கோணம் மிகவும் பெரியதாயிருந்தால் அதின் உச்சிக்கு ஆப்செட்டு எடுப்பது கஷ்டமாயாவது ஆக்ஷேபகரமாயாவது ஏற்படும். அப்பேற்பட்ட முக்கோணத்தில் நடுவில் முக்கோணத்தின் பக்கம் அல்லது பக்கங்களில் குறிகள் ஏற்படுத்தி அடியில் காட்டியபடி AD, DE யைப்போன்ற செக் லயன் (Tie line) அளக்க வேண்டும். இப்படி அளக்கும் செக்லயனை முக்கோணம் பிளாட் செய்த பின்பு ஸ்கேல்படி பார்த்து அளந்த அளவுக்கு சரியாயிருந்தால் சரியென்றும் இல்லாவிட்டால் அளவிலேயோ அல்லது பிளாட்டிலேயோ பிசகு இருக்கிறதென்றும் அறியலாம். சர்வே செய்யும் புலத்தில் நடுவில் ஆப்செட்டு எடுக்கவேண்டிய குறிகள் அதிகமா

யிருந்தால் இப்படி அளக்கவேண்டிய செக்லயனை அதற்கு அனுசரித்துவைத்தால் அதின்பேரிலும் ஆப்செட்டுகள் எடுக்கலாம்.

Fig. 71.



20. முக்கோணம் சிலவேளைகளில் பெரியதாயிருந்தால், அப்பொழுது ஆப்செட்டுகள் 1-வது அத்தியாயம் 4-வது பாராவில் சொல்லியபடி கிராஸ்ஸ்டாப்பை இரண்டு புறமும்பார்த்து செயின் லயன் சராசரி செய்து ஆப்செட்டு அளந்தால் கூடியவரையில் அந்த ஆப்செட்டு சரியாகவேவரும். தவிர ஒருவேளை கிராஸ்ஸ்டாப் தப்பால் ஆப்செட்டுக்கிடைத்த இடம் தப்பிதமானாலும் அது செக்லயனாக உதவும். செக்லயன் ஏதேனும் ஒரு குறியினின்று அளப்பதைவிட இப்படி ஆப்செட்டாக எடுப்பது அதிக சவுகரியமாயும் இன்னும் ஒரு செக் உடையதாயுமிருக்கும். ஆனால் இம்மாதிரி நீண்ட ஆப்செட்டுகளைக் கொண்டு பிளாட்டுசெய்யாமல் முதல் முக்கோணத்தை பிளாட்டு செய்துக்கொண்டு முக்கோண உச்சியினின்று செயின் லயன் குறிக்கு ஆப்செட்டு கோடு இழுத்து அதை ஸ்கேல் பிட்டினால் செக் செய்வது உத்தமம்.

THE RATIO OF THE PLAN TO THE GROUND.

21. மேலே 7-வது பாராவில் ஸ்கேலைப்பற்றி விவரித்தபோது பூமியில் அளந்த நீளத்திற்கும் அதை காகிதத்தில் காட்டிய கோட்டுக்கும் உள்ள தாமாஷா அதாவது பரிமாணம் இவ்வளவு என்பதை ஸ்கேல் என்றகருவியினால் கண்டுபிடிக்கும் விதம் சொல்லப்பட்டிருக்கிறது. இம்மாதிரி பிளாட்டு செய்யப்பட்ட ஒரு உருவம் அல்லது பிளான் அது காட்டப்பட்டபூமியைவிட எத்தனைமடங்கு சிறியதென்று அறியவேண்டுமானால் மேலேசொல்லிய நேர்க்கோட்டின் பரிமாணமாகிய ஸ்கேலுக்குறிய பரிமாணத்தை (Square) வர்க்கம் செய்யவேண்டும். அதாவது 1 அங்குலம் 1 சங்கிலி ஸ்கேலுக்கு பரிமாணமாகிய $\frac{1}{792}$ யை வர்க்கம்செய்தால் $\frac{1}{792\times 792}=\frac{1}{627264}$ உள்ளது அதாவது காகிதத்தில் ஒரு சதுர அங்குலமாவது பூமியில் 627,264 சதுரஅங்குலம், அதாவது 10 செண்டாக ஏற்படும். இம்மாதிரியே காகிதத்தில் எந்த ஸ்கேலில் தயார் செய்யப்பட்ட பிளானாலும் அதற்கு பூமி இவ்வளவு பரிமாணம் உள்ளதென்பதை அறியலாம்.

22. மேலே சொல்லியபடி எப்படி ஒரு பூமியின் யூாதேனும் ஒரு ஸ்கேலில் தயார் செய்த பிளான் அந்த பூமியைக்காட்டிலும் அத்தனை மடங்கு சிறியதென்று ஏற்படுமோ அம்மாதிரி ஒரே பூமியின் பிளானை வெவ்வேறு ஸ்கேலில் பிளாட்டுசெய்தால் ஒவ்வொரு பிளானுக்குள்ள "பரிமாண" வித்தியாசம் எவ்வளவு என்பதையும் சுலபமாய் கண்டறியலாம். அதாவது முறையே 16, 40, 80 அங்குலம் ஸ்கேலில் பிளான் தயார் செய்யப்பட்டால் இந்த பிளான்களில் எது எதைவிட பெரிது என்பதையும் எத்தனைமடங்கு பெரியதென்பதையும் சுலபமாய் அறியலாம்.

